13855.

அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை



ACC. NO. 13855.

மலர்: 12	சார்வரிஸு ஐப்பசிமீ	வருட
இதழ்: 7	அக்டோபர்-நவம்பர்-1960	சந்தா ரூ. 3-00



தன்தொழிற்கேற்ப, அடியர்க்கு ஆடைவழங்கி உய்ந்த நேச நாயனுர்.

பெரிய புராணச் சித்திர விளக்கம் 79 பக்கம் 316

உள்பொருள்

பக்கம்

1. பைந்துறையேற்றுப் பரகதி யளிக்கும் வள்ளல் (திருப்புகழ்மணி) ... 289
2. பேராசை யெனும் பிணி (கி. வா. ஜகந்நாதன் ... 294
3. நிம்பபுரம் திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) ... 298
4. செந்திலே உணர்ந்து உணர்ந்து உணர்வுற (சிவ சாம்ப சிவசர்மா) ... 304
5. ஐப்பசி தாய்மையின் வெற்றி (ஆ. கி. ரங்கராஜன்) 313
6. நேச நயினர் (கி. வா. ஜ.) ... 316
7. பாம்பனடிகளும் பன்னிருகைப் பெருமானும் (திருப்புகழ் சதுரர் சே. தா. ராமலிங்கம் பிள்ளை). 318
8. நமது கடமை (வித்வான் G. சுப்ரமணியன்) ... 323
9. துராசதன் (ரஸபதி) ... 327
10. Bhajans Part III (*Thiruppugal Mani*). 335

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 14.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா முப்பது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து, சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

குறிப்பு : *முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3–50 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1.*

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே !
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

ஆசிரியர் : முத்துஸ்வாமி

மலர் 12	சார்வரிஞு ஐப்பசிமீ அக்டோபர்-நவம்பர்—1960	இதழ் 7

பைந்துரை யேற்றுப் பரகதி யளிக்கும் வள்ளல்

(திருப்புகழ் மணி)

பிறர், பிறர் என்று ஒருவரையும் தள்ளாமல் யாவரையும் வாவென் றழைப்பதே தெய்வத் தன்மை. நீயும் நானும் ஒன்றென்ற தன்மையை யுணர்ந்து விட்டால், பிறர் என்ற தன்மை நழுவி விழுந்துவிடும். அவ்வாறு நழுவினுல் பிறப்பும் இறப்பும் இறந்து விடும்.

ஈசனுடைய பாவத்தை யடைந்தால் மரணத்தைக் கடக்கலாம். மாயை, கரும மலங்கள் அழிந்து பரமாத் மாவுடன் கலந்து பிறப்பற்று விடலாம். பெருவிரலை யும், ஆள்காட்டி விரலையும் ஒன்று சேர்த்துக் காட் டுவது சின்முத்திரை. இது ஜீவப்பிரம்ம ஐக்யத்தை யுணர்த்துகிறது. குருநாதன் உள்ளே மனச்சாட்சியா

கனறவைததார் மற்றையவ ரெனறு கறுவாது,
நன்றிபா ராட்டி நல்வாழ்வு கொள்ளுதியே.

யிருந்து கொண்டு நமக்கு ஞானத்தைப் போதிக்கிறான். தணிகேசனுகிய குருபரன் அவனே. அவனை யடைவதற்குச் சுலபமான வழி பக்திவழிதான். பக்தியைவிடச் சுலபமான வழி, பாடும் வழி. முக்தியாகிய கந்த லோகத்துக்குச் செல்லும் வழி அதுதான். திருப்புகழால் முருகனைப் பாடினல் பண்ணெனும் தாய் ஓடிவந்து நம்மை யணைத்துக் கொண்டு, பாட்டின் பொருளாகிய முருகனிடம் சேர்த்து விடுவாள். நம்மை ஏனென்று கேட்டுக் கதியளிக்கும் உறவினன் முருகனே. தெய்வம் ஏனென்று கேட்காவிட்டால் உலகத்திலுள்ள ஜீவராசிகளுக்குக் கதியேது ? துளிராகிய வில்வத்தையும், துளசியையும், அருகம்புல்லையும், அன்புடன் அளித்தால் பரகதி யளிக்கும் தெய்வம் நமக்குப் பக்கத் துணையா யிருக்கக் கவலையேது ?

"பைந்துணை ருனக்குத் தந்தேன் - பரகதி எனக்குத் தந்தாய்" என்றார் அதிவீரராம பாண்டியர்.

ஒரே காம்பில் மூன்று இலைகளை யடக்கிக் காட்டும் வில்வம், பிரம்மமாகிய ஒன்றில் பிரம்மா, விஷ்ணு, சிவம் என்ற மும்மூர்த்திகளும் தோன்றி யிருக்கும் தத்துவத்தை யுணர்த்துகிறது. மும்மூர்த்தி சுவரூபத்தையும் தன்னுள் ளடக்கிக் கொண்டிருக்கும் தண்டாயுத பாணியின் தத்துவமும் அதுவே. காம்பாகிய உடம்பில் மும்மூர்த்தி சுவரூபமாகிய வில்வத்தைத் தளிர்க்கச் செய்ய வேண்டும். முருகா வென்ற சொல்லைக் கேட்டால், வறண்டு உலர்ந்த உள்ளத்தில்

விடல்வேண்டும் வெகுளியினை ; வீணர் உறவாகா ;
அடல்வேண்டும், ஆக்கம் சிதைக்கும் அருஞ்செயலே.

அன்பாகிய நீர் பாய்ந்து ஞானமாகிய வில்வம் தளிர்க்கும். அத்தளிரைச் சிவனுக்குக் கொடுத்தால், "ஒரு கால் முருகாவென ஓதும் அடியார் முடிமேல் தனை திருதா ளருள்வோ"னாகிய முருகன், அரும்பித்த செஞ்ஞாயி றொக்கும் தனதடியைத் தருவான். இரவின் இருளைப் போக்கச் சந்திரனும், சந்திரனுடைய ஒளியை யடக்கிச் சூரியனும் உதிப்பதுபோல, கோடி சூரியப் பிரகாசமான முருகனுடைய பாதாரவிந்தம் மனவிருளைப் போக்கும்.

ஒரே தொடரில் பலவித சித்தாந்தங்களை யடக்கிக் கொண்டிருப்பது, தமிழ தெளிந்த தமிழ் கனிந்த அன்பின லுண்டாகும். இத்தமிழே முருகனை யண்டிய தொண்டர்களுக்கு வழிகாட்டப் பெருத்த வசனமாய் வெளிவந்தது. அப் பெருத்த வசனத்தைப் பாடியவர் அருணகிரியார். முருகனே சப்த ப்ரம்மமாகத் திருப்புகழி லிருக்கிறன். திருப்புகழ் பாடுவதே ஒரு யக்ஞம். நீ வேறு நான் வேறு என்ற பாவத்தை யொழிப்பதற்கு உலகத்திற்குக் கொடுத்த தத்துவமே திருப்புகழ். திருப்புகழைப் பாடி ஆணவத்தைக் கீழே தள்ளி முருகனை வணங்க வேண்டும்.

உடலென்பது எஞ்சின் போன்றது. அதை ஓட்டும் டிரைவர் முருகன். நாம் உயிரோ டிருப்பதை யுணர்கிறோம். ஆனல் உயிரைக் காணவோ, காட்டவோ முடிவதில்லை. உயிருக் குயிரான ஆண்டவனை எப்படிக் காட்ட முடியும்? அவனை உணர்ச்சியால்

பல்லினல நோய்செய்யும் பாம்பினம்போல், முட்டுகின்ற
வல்கொம் பெருதென்ன வருத்துநர்நட் பாகாதே.

உணரத்தான் முடியும். அவ்வாறு உணர பக்தி வேண்டும். பக்தி வழியில் செல்லச் செல்ல முருகன் வருவான். அவனே வழிகாட்டி யழைத்துச் செல் வான். கந்த லோகத்திற்கும் வழியே முருகாவென்ற சொல். அப்படியும் இப்படியும் செல்லாமல் முருகா வென்ற சொற்படியி லேறிச் செல்ல வேண்டும். சொற்படி யாகிய நாவின்மேல் முருகா வென்ற நாமத்தை நடத்திச் சென்றால், கீழ் வாசலைக் கடந்து மேல் வாசலை யடையலாம்.

அவ்வாறு செல்ல உலக உணர்ச்சியி லுள்ள இரண்டு கண்களையும் மூடித் தாள் போட்டுவிட வேண் டும். கீழ் வாசலால் உலகத்தைப் பார்க்கும் ஜன்னல் களே நம் முகத்திலுள்ள கண்கள். கீழ் வாசலைக் கடந்து நாத சுவரூபமா யிருக்கும் முருகனைக் கூப்பிட் டால், அவன் ஏனென்று கேட்பான். அவன் குரலைக் கேட்டவுடன் பஞ்சேந்திரியங்களாகிய அரக்கர் கீழே விழுந்து விடுவர். விண் கலந்த ஜோதியாகிய முருகன், மேல் வாசலைத் திறந்து கொண்டு, கண்களித்த உள்ளாகிய இதயாகாசத்தில் வள்ளி போன்ற ஜீவ னுடன் கலந்து விடுவான். அவ்வாறு கலப்பதே ஆட் கொள்வது. அவன் ஆட்கொள்ளும் வரையில் நாம் செய்யும் செயல்களுக்கு முருகன் சாட்சியா யிருப் பான். பிறகு செயலை அவனதாக்கி நாம் சாட்சியாக மட்டும் இருந்துவிடலாம். அப்படி யிருந்து விடுவது தான் ஜீவன்முகத நிலை.

பிணங்குமுக மாதரால, பெருந்துன்பம உண்டாகும ;
இணங்கு தவப் போர்வையினுள் இருந்(து)அலைப்பா ரும்உளரே.

தன்னுடைய ஆசையால் ஏற்படும் காரியத்திற்கு எவன் காரண மாகாம லிருக்கிறானோ அவனே தனியன். அவனே சன்னியாசி. அதாவது ஆசை யால் தூண்டப்பட்ட மனதில் ஆசை யேற்பட்டு, அந்த ஆசையினால் காரியத்தில் பிரவேசிக்காம லிருப்பவன். முருகன் கொடுக்கும் பொருளைக் கொண்டு பஞ்சபூதரு மறியாத தனி வீட்டி லிருப்பான். அத் தனிவீட்டி லிருப்பதற்கே கிருஷ்ணன் உபநிஷத் சாரமாகிய கீதையை அர்ஜுனனுக்குக் கொடுத்தான்.

காமக் குரோதங்களி னுருவாகிய துரியோதனாதி யரைக் கொல்ல மனமின்றிச் சோர்ந்துவிட்டான் அர்ஜுனன். அழுந்தோறும் அணைக்கும் அன்னை யாகிய கண்ணன் அவனுக்கு ஊக்கம் கொடுத்துத் தூக்கி விட்டான். அறிவிலா தோடியாடி விழுந்தோ றும் எடுக்கும் அப்பனாகிய முருகப்பனும், அவன்தான். கீதையினால் ஞானம் பெற்றெழுந்த அர்ஜுனன் ஆசாபாசங்களாகிய துரியோதனாதியரைத் தொலைத் தான். ஐம்புலன்களாகிய பஞ்சபாண்டவர்கள் திரௌபதியாகிய மனதுடன் ஒன்றுபட்டு, பரம்பொரு ளாகிய கண்ணனுடன் கலந்தனர். இதுவே கீதை யின் தத்துவம். இத் தத்துவத்தையே தனக்கு உப தேசிக்க வேண்டுமென்று முருகனை வேண்டினார் அருணகிரியார். ஆகவே திருப்புகழும் கீதையும் ஒன்றேயாகும். திருப்புகழ்பாடி முருகனைப் போற் றுவோம்.

பண்ணமையா யாழைவிட, பறையோசை நன்றாகும்
எண்ணமையா ஆடவரின், ஏந்திழையார் நல்லாரே.

பேராசை யெனும் பிணி

(கி. வா. ஜகந்நாதன்)

" நோய் அற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் " என்பார்கள். எத்தனை செல்வம் நிறைந்திருந்தாலும், கல்விச் சிறப்பு இருந்தாலும் பிணிவாய்ப் பட்டவர்களுக்கு அவை பயன்படுவதில்லை. ஆதலின் பிணியின்மையே எதையும் அநுபவிக்க அடிப்படையாக இருக்க வேண்டும்.

நோய் உடம்புக்கு வருகிறது. ஆனால் இந்த உடம்பு நமக்கு வந்திருக்கிறதே, இதுவே ஒரு நோய் என்று பெருமக்கள் சொல்கிறார்கள். பிறவிப்பிணி என்று இதனைச் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். நோயை மேற்கொண்டு வருந்துவது உடம்பு என்று யாவரும் நினைத்து வாட, இந்த உடம்பை மேற்கொண்டு வருந்துவது உயிர் என்று நல்லவர்கள் வாடுகிறார்கள். உடம்பே இல்லாதவர்களுக்கு நோயே இல்லை என்று சொல்லி விடலாம். உடம்பால் வரும் சிறுநோய்களும், உடம்பு வரும் பிறவியென்னும் பெருநோயும் அவர்களுக்கு இல்லாமலே போய்விடும் அல்லவா ? அந்தப் பிறவி நோயை மாய்க்க வழி உண்டா ?

ஒரு நோய் வந்தால், அது எதனால் வந்தது என்பதை ஆராய்ந்து, அதைப் போக்கும் முறையையும் சிந்திக்க வேண்டும்.

" நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் "

என்பது திருக்குறள். பிறவியென்பது ஒரு பெரியநோய் என்று நாடித் தேர்ந்து கொண்டபிறகு, அதற்குமுதல் அல்லது காரணம் இன்னது என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

பதமாகா உண்டியினும், பசித்திருத்தல் நன்றாகும்
இதமாகா நட்பினும், இறந்துபடல் நன்றாமே.

பிறவி தொடர்ந்து வருவது. ஒவ்வொரு பிறவியிலும் நாம் பல அநுபவங்களை அடைகிறோம். போகம், கர்மம் என்றும், நுகர்ச்சி, செயல் எனறும் இவற்றைச் சொல்வார்கள். முன் பிறவியிலே செய்த நல்வினை தீவினைப் பயன்கள் இந்தப்பிறவியைச் சார்ந்து இனபதுனப நுகர்சசிகளை விளைவிக்கின்றன. அவற்றை நாம் அநுபவிக்கிறோம். அதனோடு இநதப பிறவியிலும் நன்மை தீமைகளைச் செய்கிறோம். முன்னைச செயலின் விளைவை நுகர்ந்தும், அடுத்த பிறவியால் பயன் தரும் செயல்களைச் செய்தும் வாழ்நாளைப் போக்குகிறோம். விதது இன்றி விளைவு இல்லை; வினை இன்றி நுகர்சசி இல்லை. முன்னைப் பிறவியில புண்ணியபாவம் இன்றி யிருந்திருந்தால் இநதப் பிறவியில் நுகர்ச்சி இல்லை ; பிறவியே இராது.

செயல் செய்வது ஒழிந்தால இனிமேல் போகம் நுகர்வதும் ஒழிவது எப்படி ? செய்ய வேண்டும் எனற எண்ணம் மனத்தில் தோன்றுகிறது. எல்லாச செயல்களுக்கும் வித்தாக இருப்பது எண்ணமே. நல்ல எணணங்கள் நல்ல செயல்களுக்கு வித்தாகவும் அமைகின்றன. ஆதலின் எண்ணத்தில கட்டுபபாடு உண்டானல் செயலிலும் கட்டுபபாடு உண்டாகும்.

அது வேணடும் இதுவேண்டும் என்ற ஆசை காரணமாகவே நாம் எண்ணங்களை வளர விடுகிறோம். அந்த ஆசையே எல்லாவற்றுக்கும் மூலம் என்று சொல்லிவிடலாம். ஆசை உண்டானவுடன் செய்யும் முறையை ஆராய்ந்து செயலில் புகுகிறோம். விரும்பி ஆராய்ந்து செய்கை செய்கிறோம். பிறவிக்குக் கர்மம் ஆதாரமானல கர்மத்துக்கு ஆசை ஆதாரமாகிறது; ஆதலின் பிறவிக்கு அடிவேர் ஆசை என்று துணியலாம்.

" அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து "

என்று இந்த உண்மையைத் திருவள்ளுவர் ஓதுகிறார்.

செல்வர்க்கே ஈகை சிறக்கும் ; எந்நாளும்
நல்சொல்லால் உறவினர்க்கு நன்மகிழ்ச்சி தோன்றும்மே.

உடம்புக்கு வரும் நோய்களைவிட உடம்பைத் தரும் பிறவி நோய் பெரிது; அதைத்தரும் ஆசையோ அதைவிடப் பெரிது: அதையும் நோய் என்று சொல்வது பொருத்தம்.

அருணகிரிநாதர் ஆசையையும் பிணியென்றே கந்தர் அநுபூதியில் சொல்கிறார்,

பேராசை எனும் பிணி

என்பது அவர் வாக்கு.

பிறவியென்னும் பெருநோய் நீங்கி இறைவன் திருவருளின்பததிலே எனறும் மங்காமல் ஆழ வேண்டும். அந்த நோய் நீங்க அதன் முதலாகிய ஆசை நீஙக வேண்டும். அப்படியின்றி மேலும் ஆசையை வளர்ததுக் கொண்டு அதனால் பிறவிகள் ஒன்றன்பின ஒனறாகத் தொடர்நதுவர, பிறந்தும் இறந்தும் உழனறு கொண்டிருக்கிறோம். "நான் இப்படி உழன்று கொண்டிருக்கிறேனே! இது தகுமா?" என்று கேட்கிறார் அருணைமுனிவர்.

"பேரா சைஎனும் பிணியில்' பிணிபட்டு
ஓரா வினையேன் உழலத் தகுமோ?

ஊர்சுற்றிக்கொண்டே இருப்பவனைப் பார்த்தால் நாம் பரிகாசம் பண்ணுகிறோம். நாடோடி வாழ்க்கை உடையவர்களை நன்கு மதிப்பது உலகில் வழக்கம் அன்று. நாமும் ஒரு வகையில் நாடோடியே. ஊர் ஊராகத திரிவதும் நாடு நாடாகத் திரிவதும் ஆகிய அலைசசலைவிடப் பெரிய அலைச்சலை நாம் மேற்கொண்டிருக்கிறோம். உடம்பு உடம்பாகப் புகுந்து புறப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த அலைச்சல எபபோது தொடங்கியது? தெரியாது.

"மாதா உடல்சலித்தாள்; வல்வினையேன கால்சலித்தேன்;
வேதாவும் கைசலித்து விட்டானே"

என்பார் பட்டினத்தார். இதைவிடப் பெரிய அலைச்சல் எதுவும்

வன்சொல்லும் வஞ்சனையும் இரக்கமிலர்க் காதலினால்,
புனமை வறுமையர்கள் புழுங்கி அழுங்குவரே.

இல்லை. அதனால், 'உழலத் தகுமோ?" என்று இரங்கிக் கேட்கிறார் அருணகிரியார்.

ஆசைகள் இரண்டுவகை; சிறிய ஆசை, பேராசை என்பவை. சிறிய ஆசைகளை அநுபவித்துத் தீர்க்கவேண்டும்; பெரிய ஆசைகளை அறிவாராய்ச்சியால் அகற்ற வேண்டும். வாழைப்பழம் உண்ண வேண்டும் என்ற ஆசை தோன்றினால், உடனே ஒருபழத்தை வாங்கி உண்டு அதை நிறைவேற்றிக் கொள்ளலாம். பிறருடைய பொருளை நாம் அநுபவிக்க வேண்டும் என்ற ஆசை எழுந்தால், அதை நியாயமற்றது என்று அறிந்து மறக்க வேண்டும்.

இந்தப் பேராசை நோயாலே சிக்கிக் கிடப்பதனால், மேலும் மேலும் பிறவியிலே உழன்று சுற்றுகிறோம். "இவற்றையெல்லாம் நன்றாக ஆராய்ந்து பார்த்து அறிவாராய்ச்சியினால், ஞானவிசாரத்தினால் ஆசைகளை மாற்றாத பாவியேன் நான்" என்கிறார் அருணகிரியார். ஓராவினையேன் - ஞான விசாரம் செய்யாத பாவத்தை யுடைய யான. பேராசைக்கு மருந்து அநுபவம் அன்று; அறிவினால் ஆராய்ந்து பார்த்து அமைதி பெறுதல். அந்த ஆராய்ச்சி இல்லாதவர்களை ஆசை கட்டுக்குள் ஆழ்த்திவிடும்.

ஓராத வினையேனாகிய யான் பேராசை யென்னும் நோயிற் கட்டுப்பட்டு பலபல பிறவிகளைப் பெற்று உழலுகின்றேன்; இந்த நோய்தீர வழி இன்னதென்று ஓராத வினையேன்; இது தகுமா?' என்று முருகனிடம் முறையிட்டுக் கொள்கிறார் அருணகிரிநாதர்.

> பேரா சைஎனும் பிணியிற் பிணிபட்டு
> ஓரா வினையேன் உழலத் தகுமோ?

நெய்யால விளக்கெரியும் நீர்மைபோல், ஆன்றோர்
மெய்யாம் செயல்செய்து மெய்யின்பம் மேவுவரே.

நிம்பபுரம்

திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

அஞ்சுவித பூத முங்கரண நாலு
மந்திபகல் யாது மறியாத
அந்தநடு வாதி யொன்றுமில தான
அந்தவொரு வீடு பெறுமாறு
மஞ்சுதவழ் சார லஞ்சயில வேடர்
மங்கைதனை நாடி வனமீது
வந்தசர ணார விந்தமது பாட
வண்டமிழ்வி நோத மருள்வாயே;
குஞ்சரக லாப வஞ்சியபி ராம
குங்குமப டீர வதிரேகக்
கும்பதன மீது சென்றணையு மார்ப
குன்றுதடு மாற இகல்கோப
வெஞ்சமர சூர னெஞ்சுபக வீர
வென்றிவடி வேலை விடுவோனே!
விம்பமதில் சூழு நிம்பபுர வாண
விண்டலமை கீபர் பெருமானே!

(பதவுரை.) (குஞ்சர ....மார்ப!)

குஞ்சர - (வானுக) யானையானவரும்;

கலாப - தோகை மயில் போன்ற சாயலரும்; வஞ்சி - வஞ்சிக் கொடிபோல துவளும் இடையினரும் (ஆகிய);

அபிராம - தெய்வ அழகுள தேவியரின;

குங்கு படீர- குங்குமக் குழம்பு கலந்த செஞ்சந்தனம் பூசிய,

என்றும் இழிவு, இரத்தலைமேற் கொள்ளின;

என்றும் இருப்பர், புகழ்நிறுத்தும் செவ்வியரே.

அதிரேக கும்பதன மீது - அதிசயம் மிக்க குடம் போன்ற குயங்களில் ;

சென்று அணையும் மார்ப - (தாவிச்) சென்று தழுவும் திருமார்பை யுடையவனே !;

(குன்று தடுமாற ....விடுவோனே !)

குன்று தடுமாற - (கிரவுஞ்சம், மாயா முதலிய கொடிய) மலைகள் தடுமாற்றம் கொள்ளவும் ;

இகல் கோப வெஞ்சமர சூரன் நெஞ்சு பக - பகைத்துச் சினந்து அதிபயங்கரப் போர் இயற்றும் சூரபதுமனது இதயம் (இரண்டாய்ப்) பிளவு படவும் ;

வீர வென்றி வடிவேலை விடுவோனே - வீரமும், வெற்றி யும் (ஞானக்) கூர்மையும் கொண்ட வேல்படையை ஏவிய எம்மானே !;

(விம்பமதில்.................. ..பெருமாளே !)

விம்ப மதில் சூழும் நிம்பபுர வாண - ஒளிமயமான மதில் கள் சூழ்ந்த நிம்பபுரம் எனும் பதியில். (இன்ப) வாழ்வாக இருப் பவனே !;

விண் தல மகீபர் பெருமாளே - வானுலகப் பேரரசர்கள் (போற்றும்) பெரிய பொருளே !;

(அஞ்சுவித............... ..அருள்வாயே !)

அஞ்சுவித பூதமும் - (மண் புனல் கனல் வளி வெளி எனும்) ஐந்துவகையான பூதங்களாலும் ;

கரண நாலும் - (சித்தம் மனம் அகங்காரம் புத்தி எனும்) கரணங்கள் நான்காலும் ;

அந்தி பகல் யாதும் அறியாத - இரவு பகல் முதலிய (கால தத்துவம்) ஒன்ருலும் காண இயலாத ;

துணையிறுதிக் காமெனறே, தூயோர் அறம்புரிவர் ;
இணைவெற்றி வேண்டின், வெகுளிவிடல் நல்லறமே.

அந்தம் நடு ஆதி ஒன்றும் இலது ஆன - முடிவு, நடு முதல் எனப்பெறும் (காலம் இடம்) எதுவும் இல்லாதது ஆன ;

அந்த ஒரு வீடு பெறும் ஆறு - அழகிய ஒப்பற்ற முத்தியை (அடியேன்) அடையும்படி ;

மஞ்சு தவழ் சாரல் அம் சயில - மேகங்கள் தவழ்ந்து மழை பொழியும் அழகிய மலைநில (வாசிகளான),

வேடர் மங்கைதனை நாடி - குறவர் குல வள்ளியாரை விரும்பி ;

வனமீது வந்த சரண அரவிந்தம் அது பாட - வனத்தில் நடமாடிய திருவடிக் கமலங்களைப் பாடி அடியேன் பரவும்படி ;

வண்தமிழ் விநோதம் அருளவாயே - வளமான விநோதத்தை விளைவிக்கும் பயனுள்ள தமிழைப் பாலித்தருள், (எ - று).

விரிவுரை.

அழகின் கொழுந்து ; அருள்மய விருந்து ; அறிவுப் பிழம்பு ஆனவர் தேவ யானையார். அவரை வானுலக யானை வளர்த்தது. அதனால் அவர் பெயரே தேவயானை என்று அமைந்தது.

கலாபம் என்பது, ஆகுபெயராய் மயிலை உணர்த்தியது ; தேவயானை என்பது கொண்டு, பயங்கர தோற்றத்தரோ என்று ஐயுறமாட்டோம் ; அவர் கலாபம் எனும் மயில்போன்ற மென்மைச சாயலர்.

மற்று கலாபம் என்பது, இடையில் அணியும் பதினாறு கோவையான (ஒட்டியாணம் எனும்) ஒரு அணிகலனையும் உணர்த்தும். காளைகள் அரைக் கச்சை கட்டுவர் ; காரிகையர் பூண்பது கலாபம் என்றும் கருதத் தகும்.

வஞ்சி ஒருவகைக் கொடி ; அதுபோல் துவளும் அவ்வளவு நுண்ணிய இடையினை யுடையவர் அவர்.

மாலுமிகள் நீர்க்கடலை, மறவர் படைக்கடலை,
சாலுங்காப் பாளர் தவக்கடலைத் தாண்டுவரே.

பணிமுகமான உயிர்க் குழந்தைகட்குப், பாலூட்டும் அதிசயம் ஆனது அவரது குயங்கள. அந்த அமுதத்தின பயன், பரம யோக ஞானம். அக் குயங்களில், வெப்பும் குளிர்சசியும் விளைவிகக்கும் புனித கலவை பூசியுளர். (படீரம் - சந்தனம்.)

அறிவுள் அறிவான உம்மை அறிவதே தொழிலான அவரை, மகிழ்நது தழுவும் மாாபாளன் நீ. அந்த் அருமை அறிவோம். அதனுறருன்,

' குஞ்சர கலாப வஞ்சி அபிராம-குஙகும படீர அதிரேகக் கும்ப தனமீது செனறணையும் மார்ப !' என்று கூப்பிடுகிறேம்.

ஆணவமான சூரபதுமன, அநியாயம் பல செய்தான். அவன் ஆட்சியை, உறுத்து அடர்க்க உதயம் செய்தனே! உயிர் பிழைக்க நினைதது, அவன ஓடினன. அவனுக்கு அரணுக நின்ற வஞ்சக கிரவுஞ்ச மலை ஒனறு; அவனை மறைததுத் தொடர்நதது ஒரு மாயாமலை. அந்த மலைகள் பொடிபட, அவுணர் தலைவன மார்பம் இடிபட, எழும்பிய வேலை ஏவிய இறைவா! ஓயாது இந்நுட்பம் உணர்ந்து, 'குனறு தடுமாற, இகல் கோப வெஞ்சமர சூரன் நெஞ்சுபக, வீர வென்றி வடிவேலை விடுவோனே !' என்று உன்னை விளிக்கின்ரேமே !

வித்தக சக்தி சொரூபம் வேப்ப மரம். ஏராளமாக அவைகள் இங்கு இருக்கின்றன. அதனுல் இப்பதி, நிம்பபுரம் எனும் பெயர் பெறுகிறது. இததல அருமையை இனிது உணர்ந்து, கம்பீரமாக இங்குக் காட்சி தருகினருய்; அறிந்தோம். அதனுல் தான் ' விம்பமதில் சூழும் நிம்பபுர வாண !' என்கிறேம். (விம்பம் - அழகிய சித்திர வேலைப்பாடு.)

அட்டதிக்குப பாலகர் முதலினேர், ' விண தலமகீபர் ' எனப் பெறுவர்; அவாகள் போற்றும் புனித பரம்பொருளான

கற்றுர் சபையைத் தாமஞ்சார் ; முற்றும்
பெற்றேம், தெய்வத்தின் பேரருளால் என்பாரே

உன்னை, ' விண்தல மகீபர் பெருமாளே ! எனும் எம் விளியை ஓர்ந்தருள் !

வேலை விடுவோனே ! பெருமாளே ! விநய முகமான எம் விண்ணப்பத்தைக் கேட்டருளும் !

மாயாப் பிரகிருதி, மேலிருந்து மலர்ந்தது. அதனிலிருந்து, அதிநுட்பமான சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் எனும் அரிய தன் மாதத்திரைகள் அரும்பின. அவைகளி லிருந்து மண், நீர், கனல், காற்று, விண எனும் மாபெரும் பூதங்கள் மலர்ந்தன. உயர்ந்த அவைகள் ஒன்று கூடி, உருவான ஒன்று இந்த உலகம்.

ஆக்கையுள் இருந்து, சிந்தித்து அறியும் சித்தம். சிந்தித்த வைகள் சரியோ தவரோ என ஐயுற்று, மனனம் செய்கிறது மனம். ஐயம் அகல முயன்று அறிவேன் என்று, அதிர்த்து எழுகிறது அகங்காரம். இதுதான் முடிபு என்று, தப்பும் தவறு மாகப் புளகிதம் அடைகிறது புத்தி.

இவைகளின் இடையில், மறதி ஒருபுறம் மாறி மாறி வருகிறது ; இது கேவல நிலை எனப்பெறும் ; இதனால் அறிவு இருளடைகிறது : இருள் பிழம்பால், உறங்கி விடுகிறது உணர்வு.

நினைவு மற்றொரு சமயம் நிமிர்கிறது : சகலம் எனப் பெறும் இதனிலிருந்து, அறிவினில் ஒளி அமைகிறது. அவ் வமயம் விழிப்படைந்த ஆன்மா, விளங்கும் சூழ்நிலை நோக்கி வியக்கிறது. ஊன்றி இவைகளை யெல்லாம் உணர்ந்து,

'' அநதி பகல் அற்ற நினைவு அருள்வாயே '' என்று, எத்தனை தரமோ வேண்டி இருக்கின்றேனே !

ஐம்பூத பரிணமம் ஆன உலகும், பூத உடலும், கரணங் களும், நினைப்பும் மறப்பும்தான துன்பப் பிறவிக்குத் தோற்று

பொய்ம்மொழியால் நட்புப்போம்; புனமூப்பால இளம்ஒளிபோம் மெல்வாழ்நாள் தீரின, மெல்லுயிர்போம் நிசசயமே.

வாய் செய்கின்றன. அவைகள் அற்ற இடமே வீடுபேறு எனப்பெறும்.

அடி இல்லாதது. நடு இல்லாதது. முடிவும் இலாதது அந்த முத்தி நிலம். அது தோன்றிய நாளும் இலலை. இடைக் காலமும் விளங்க வில்லை. என்று முடியும் என்று சொல்லல் ஆவது இல்லை. எனவே, கால இட வர்த்தமானம் காணாத அதுதான், கடவுள் நிலம். முத்தி நிலம். மோட்சபூமி என் கின்றார் முன்னோர்.

" ஒரு பூதரும் அறியாத் தனிவீட்டில, உரையுணர்(வு) அற்றிரு பூத வீட்டில் இராமல் " என்று ஒரு காலத்தில் அறிவித்தீர் ;

அறிவித்தால் போதுமா? அதனில் என்னை அகப்படுத்த வேண்டாவா! செய்தால் நீர்தானே அதையும் செய்தல் வேண்டும்!

' அஞ்சுவித பூதமும்—கரண நாலும்—அந்தி பகல் யாதும் அறியாத—அந்த நடு ஆதி ஒன்றும் இலதான—அந்த ஒரு வீடு பெறுமாறு ' அருளுதி எம் ஐயா!

தாவி மேகங்கள் வந்து தவழ்கின்றன. அதனால் குளு குளு என்று காற்று குளுமை காட்டுகிறது. சாரல் மழை தன் சால்பு காட்டும் அம் மலை நிலததில், குறமகள் வள்ளியார் உள்ளம், குகா! குகா! என்று கூவுகிறது.

அதனால் அவரை ஆவலித்து, மலைநிலம் நோக்கி உமது மலரடிகள் நடத்தனவாம். அவர் அழைப்பு இதய அழைப்பு. அதுபோல், உன்னை அழைக்கும் காதல் அதிகரித்து உளதே! அப்படி அழைப்பதற்கு ஆன வளம் தா! வளமான தமிழ்தா! அந்த விநோத அனுபவத்தை அருளாயா!

அறிவுள் அறிவான நினையறியும் அறிவும், ஜீவன் முத்தர்கட்கு யோக ஞானப் பாலூட்டும் குயமும் உள்ள கிரி யா சத்தியாம் தேவ யானையைத் தழுவுபவனே!

சீரில்லாச செய்கையால் செல்வம்போம் ; செம்மை
நீரிலலா வாக்கால, நியதி அழியுமரோ

பக்திப் பெருங்காதல் கொண்ட இச்சா சக்தியின் இடம் தேடி நடந்த திருவடிகளை யுடையவனே !

மாயா ஆணவங்களை மட்டந் தட்டும் ஞானசக்தியுள்ள நம்பா! அவர்கள் பெறற பேற்றை அடியேனும் பெறுதற்குவழி பயனுன தமிழால் உன்னைப் பாடுவதுதான். எலும்பைப் பெண்ணுக்கியது ; ஆண்பனையைப் பெண்பனை ஆக்கியது. ஏட்டை ஆற்றில எதிரேற விட்டது. நெருப்பில் பசுமையாய் நின்றது. கருங்கல்லைத் தெப்பமாக்கிக் கரையேற விட்டது. முதலை உண்ட பாலனை உதிக்க வைத்தது. இததகைய எத்தனையோ அற்புதங்களைச் செய்த தமிழ் வண்தமிழ் ; விநோத வளத்த தமிழ். அந்தத் தமிழ் அடியேற்குக் கைவலயமாகும்படி அருள் வரதா ! அருள் துரையே என்று விநயம் காட்டி விண்ணப்பித்தபடி.

வாழ்க திருப்புகழ் வளம்.

செந்திலை உணர்ந்து உணர்ந்து உணர்வுற

இலந்தையடி கவுணியன வித்வான் :

(இராஜ சிவ. சாம்பசிவ சர்மா.)

(263-ம் பக்கத் தொடர்ச்சி)

அவாவே பிறப்பிற்கு வித்து ; பிறப்பற வேண்டினுல் அவா நீங்கவேண்டும். வேண்டாமை அல்லது விரும்பாமையை மேற்கொண்டால அவா அகலும். வேண்டுதல வேண்டாமை மனத்தின்கண் நிகழ்வன. வேண்டுதல் வேண்டாமையோ மனத் தூய்மையை அகற்றிவிடும். மனம் மாசு படிவதற்கு அவையே காரணங்கள் ஆகும். மன மாசற்றிருத்தலே பேரறம் என்றும், பிற ஆரவார நீர்மைய எனறும் கூறப்படும். மன மாசுற்றதாகப் பிற அறங்கள பலவற்றைச் செய்தல பயனற்றன.

மாட்சிமனை வீட்டிற்கு மதிபபாம் ; உயர்வீரன்
ஆட்சியால் சேனைக்கு அதிகமதிப் பாகும்மே.

அற்றவர் என்ருல் யாவும் அற்றவர்; பற்றற்றவர்; அவா அற்றவர். அவா என்னும் துன்பம் தொடராதாயின் துன்ப மில்லை; இனபுமே உண்டாகும். எனவே மனம் தூய்மை உறுதலுக்கு அவா இன்மை வேண்டும். அவ்வவா இன்மை, மெய்யுணர்தலால் உண்டாகும்; அதற்கு வாய்மை இன்றி யமையாததாகும்.

இவை யாவும் எய்துதல் என்பது எளிதில் கூடுவதாகுமோ? எளிதிற்கூடும் நெறி ஏதேனு முண்டோ? அதனை எங்ஙனம் கடைப்பிடித் தொழுகுவது? எனபனவாய வினுக்கள் எழு கினறன. அதற்கு நாம் என்ன செய்யவேண்டும் எனின, மாணிக்கவாசகர் வாக்கு நினைவிற்கு வருகிறது. 'பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம் சித்தமலம் அறு வித்து' என்கிருர். 'பாருருவாய பிறபபற வேண்டும், பத்தி மையும் பெறவேண்டும்.' மக்களோ, இந்திரிய வசத்தில் மயங் கிச் சிக்குண்டு உழல்கின்றனர். அன்னுர் இந்திரிய வசத்தி னின றும் நீங்கவேண்டும். புலனகள் ஐந்து. அவைகள்தம் செயல களால், பொறிகளால மக்களை அலைக்கழிக்கின்றன. அதற் குக் காரணம் மனம். மனமோ அனுதியாகத் தொடர்பு கொண்ட முககுண வயத்தில் அகபபட்டது. அதனுலன்ரே, 'காரணமாகும் அனுதி குணங்கள் கருத்துறும் ஆகாதே' என்ருர். இங்கு அனுதியே பற்றிவரும் முக்குணங்கள மனம் முதலியவற்றிற்குக காரணமாதலின், 'காரணமாகும் அனுதி குணம்' என்ருர். இந்திரியங்களோ மனத்தினுற் கட்டுண்டு ஒன்றற்கொன்று மாறுபட்டு நடக்கும் இயல்புடையன. 'ஒன்றி ஞேடு ஒன்றும் ஓர் ஐந்திஞேடு ஐந்தும் உயிர்பபதும் ஆகாதே' எனபதும் அறிக. எனவே, சிந்தைதனைத் தெளிவித்தால் அன்றி வேறு வகையால் பொறி புலனகளை அடக்கலரிது எனபது தெளிவு. "எண்ணமே யுடல வாய் மூக்கொடு செவி

நாட்டை உயர்கதியில நலபபடுத்தும் மேலோர்
கேட்டைப் பெருக்கும் கீழ்மைநிலை எண்ணுரே.

கண் என்றிவை நின்கணே வைத்து, மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் '' என்று கூறப்படுதலால், ஒரு நெறி காண்பித் தாருமாம்.

சித்தத்தை யடக்கி இறைவன் திருவடிக்கண் வைப்பின் பின்னர் யாவும் சரியாகிவிடும். சித்தமோ அடக்குவதற்கு மிகவரிது. பாதரசம் போலச சலிப்புறும் தன்மையது. 'சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது' என்றார் தாயுமானாரும். இறைவன் திருப்பாதங்களைச சித்தம் என்னும் திண் கயிற்றால் கட்டுவித்தல் வேண்டும். அதுவே பெரும் வித்தகர் செயல். இறைவன இயல்பான தண்ணளியாளன். அவன் மக்கட்குப் பத்தியைத் தந்து, மக்கள் அப்பத்தியால் தன் பாதங்களில் மலரிட்டு வணங்குவராயின, அவர் சித்தம் புகுந்து, அடியவராக ஆட்கொண்டு அவர்களுடைய தீவினை தீர்த்து உய்யுமாறு அருள் புரிந்து முத்தியும் தந்து, மூவுலகிற்கும் அப்பால் அழியாப் பேரின்பப் பெருக்கில் ஆழ்த்தித் திளைக்கச் செய்கிறான என்றால், அத்தகைய பெருமான் திருவடிக்கண் நம் சென்னி மனனி மலர்தல் வேண்டாவோ? என்னே அவன் அருள்! 'பிறவியெனும் இக்கடலை நீந்தத் தன் பேரருள் தந்தருளும் தண்ணளியாளன இறைவன் எனபதும் உணரலாகும்.

'' பிறவி எனும் இக்கடலை நீந்தத் தன் பேரருள் தந்தருளினான் ''

'' சித்தமே புகுந்து எம்மை ஆட்கொண்டு
தீவினை கெடுத்து உய்யலாம்
பத்தி தந்துதன் பொன்கழற்கணே
பனமலர் கொய்து சோத்தலும்
முத்தி தந்து இந்த மூவுலகுக்கும்
அப்புறத்து எமை வைககும்

உற்றகண வனகலங்கில், உயஙகும் மனைவிமகர்;
கற்றார் கலங்கில், பொருள்நூல் கலைந்திடுமே.

அத்தன் மாமலர்ச் சேவடிக்கண்
நம்சென்னி மன்னி மலருமே.''

என்றவற்றை நன்குணர்தல் வேண்டும்.

சித்தத்தைச் சிவன்பால் வைத்தல் எளிய செயல் அன்றே னும், நெடுநாட் பழக்கத்தால் சித்தம் ஒடுங்கி, சிவாய நம, முருகசிவம், சரவணபவாய எனக் கூறிய வண்ணமா யிருப்பின் அச் சித்தத்தின்கண் சிவன் எழுந்தருளுவான. ஆனால் சித்தம் மலக்கட்டினின்றும் விடுபட வேண்டுமே எனின், அதற்கு அவன் நாமத்தை இடையறுது சிந்தித்தல் வேண்டும். அவ் வனுசந்தானம் பாச க்ஷயத்திற்கு ஆதாரமாகும்.

''பாவியேற்கும் உண்டாமோ பரமானந்தப் பெருங்கடற் சேர்ந்து
ஆவி யாக்கை யானஎனது என்று யாதுமின்றி அறுதலே''

என்று வாய்விட்டு அலறி அழுது கசிந்துருகி நிற்றல்வேண்டும். அந்நிலையில்தான் 'நிச்சம் என்னெஞ்சில் மன்னி யாருகி நின்றனே' என்னும் அனுபவ உணர்ச்சியைப் பெறலாகும். ஏனெனின், புயங்கப பெருமான் சிறியேமை ஓவாது உள்ளங் கலந்து உணர்வாய் உருக்கும் வெள்ளக் கருணைபொழியும் உள்ளங் கவர்கள்வன் ஆதலின் என்க.

அரிதிற்பெற்ற மானிட உடலால் பெறக்கூடிய சிறந்த பொருள் இறைவன் திருவடி பெறலே. ஆனல் இறைவன் கருவி கரணங்களால் சென்று பற்றும் தன்மைக்கு அப்பா லான். ஆதலால அவனை எய்துதற்குக் 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி,' 'நெறியறியேன், நினைனயே அறியேன், நின்னையே அறியும் அறிவு அறியேன, உடையாய், உன் அடைக்கலமே' என்று நாத்தழும்பேற ஓதி ஓதிச் சரணம் புகுதல் வேண்டும். அடைக்கலம் புகுந்தால் காத்தல் அவன் கடமையாய்விடும். அடைக்கலங காத்தல் பேரறங்களில்

நாடுங் குடிகலங்கில், நல்லாட்சி குன்றும் ;
பாடல் அதிர்ந்திடும் யாழ்நரம்பு பாழ்படினே.

ஒன்று. ஆதலின் சரணம் புக்காரைக் காவாமல் இரான் இறைவன் என்பதை உறுதியாக நம்புதல் வேண்டும்.

அப் பெருமான் ஒருவனே ஒன்றுக்கொன்று மாறுபட்டெழுந்து மயக்கும் வஞ்சபுலன் வழியை அடைக்கும் ஆற்றுடையவன்; உள்ளத்தினகண் ஊறிநின றெழுபவன். அவ்வாறுயவனுயினும், இயல்பான கருணையினுற் செய்யும் அருளை எளிதாகக் கருதிடல் பேதைமைப் பாலதாகும். 'உணர்ந்த சிறந்த முனிவர்கள் தேவர்கள மற்றையோர் உணர்வுக்கும் தெரிவரும் பொருளாயவன்' இறைவன எனபதை எள்ளளவும் மறக்கலாகாது. 'உரை மாண்ட உள்ளொளி உத்தமன' அன்றே இறைவன. தெரிக்கும்படித்தன்றி நினற சிவமாகிய பிரான், ஊன் நாடி வந்து உள்புகுநதால், அது பெறலரும் பேறே அனறோ? ஆனநதக் கூத்தன் அருள் அன்றோ அது. அவன திருவடிகளோ ஆனந்தத் தழுந்துமாறு செய்ய வல்லனவாகும். ஆயின, அருட்கழல்கள் சித்தத்தில புகுந்தமை நினைந்து வியந்து, அததிருவடிகளை 'வானுநது தேவர்கட்கு ஓர் வான பொருளை' எளிதில் பெற்றமையை யுன்னியுன்னி உன்மத்தருய்த் தனனையும் மறநது ஆடிபபாடிக் குதித்து ஆனந்த பரவசம் உறுதல் வேண்டுவதன்றி வேறு செய்யக் கடவதென் னுள்ளது? இந நலமெல்லாம் எஙஙனம் பெற்றேமெனச சிறிது சிந்தித்து நோக்கின, 'உள்ளபபடாத் திருவுருவை உள்ள மொடுக்கி உள்ளுதலால், களளப்படாத வெளிவந்த வனத வான கருணை'யின பெருமை எனபது நன்கு விளங்கும். அந்நிலையில் உள்ளத்தில ஓர் ஒளி உண்டாகும். அவ்வருள் ஒளி அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானத்தையும் ஆனந்தத்தையும் அளிப்பதாயின, அவ்வொளியைப பெற முயல வேண்டுவது மானிடம் பெற்றூர் கடமையே அனறோ? 'ஒளி வந்த என உளளததினுளளே ஒளிதிகழ அளிவந்த அந்தண'

மனையாள இல்லாத மனைபாழ், அயலூரில
தனையறிந்த நட்பிலதேல், சார்வதஙகு தவறுமே.

என்று வாயார வாழ்த்தி, அவனடியை உளத்திருத்தி அவ் வொளியாற் பெறும் அருளை நாடிப் பெறவேண்டும்.

'நான் யார்? என் உள்ளம் யார்' என்று வினவி வினவி மனத்தை அவனை நாடிச் செலலும் நெறியில் நிறுத்தல் வேண் டும். ஏனெனில், மனம் நனமை தீமைகளை அறியச செய்யும் சிறநத கரணமாய் ஆன்மாவிற்கு அமைந்துள்ளது என்பதை மறந்து விடலாகாது. மறவாதிருக்க என்ன செய்யவேண்டும்? மனத்தை அதனவழியில் விட்டால் மறந்துவிடும் இயல்பினது. ஆதலால், 'ஊனுய, உயிராய், உணர்வாய் என்னுட் கலந்து தேனுய் அமுதமுமாய், தீங்கரும்பின கட்டியுமாய், வானோர் அறியா வழி யெமக்குத் தந்தருளும் தேன, அவன: அவனை மறவாதே எனறு வாயாரக் கூறிக் கூறி மனத்தை நினைத்துக் கொண்டே இருக்குமாறு செய்யவேண்டும். அவ்வாறு அவனையே சிந்தித்துத் தெளிந்து அறிந்து உணர்ந்து உள்ளத் தைக் குழையச் செயது, அவனுக்கு இருப்பிடமாக்கி விட்டால், தான் அவனுகி விளங்கப் பழம் பிறபபுணர்சசியும் தோன்றும்; எடுத்த பிறவியின சிறப்பும் அருமையும் அறியலாவதோடு, உடலின இழிவும் உலக வாழ்க்கையின் அழிவும் இழிவும் தோன்றலாகும்.

மக்கட் சட்டகத் தோடிருக்கும் நாம் ஒரே பிறவிதான்; அதுவும் மானிடப் பிறவிதான் கொண்டு வந்துள்ளோம் என்று எணணிவிடுதல கூடாது. நம்மிடம் காணும் வேறுபட்ட குணஞ் செயலகளுக்கும் இன்ப துன்பங்களுக்கும் காரணம் யாதென நாடிச சென்று அறிதல் வேண்டும். அவற்றிற்குக் காரணம் வினை எனற முடிவிற்கு வருவோம். அவ்வினையை ஊழ் என்றும் விதி என்றும், கன்மம் என்றும் பலாறு கூறு வதை உணரலாம். அது தோனறக் காரணத்தை ஆராயின் முன்பிறவி ஏற்பட்டிருந்தமை புலனுகும். ஒரு பிறவி யல்ல, பல

முற்றறிவர் இல்லாச சபைபாழ்; முதனமைபெறக்
கற்றறிவர் இல்லாத காயம் பழுதம்மா.

பிறவிகள் எடுத்திருத்தல் வேண்டும் என்பது தெளியலாம். அப்பிறவிகள் புல்முதல் இப்பொழுது அடைந்துள்ள மானிடப் பிறவி வரையிலும் பலவாகலாம். ஆன்றோர்களும் தம் அனுபவ உணர்ச்சியால் அவ்வாறே கூறியுள்ளனர்.

" ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்
ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந்து எய்த்தேனை "

என்றும்,

" புல்லாகிப பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள கண்டினறு வீடுற்றேன் "

என்றும் கூறிய பெரியார் மொழியைச சிநதித்துப் பாருங்கள். அவ்வாறு கூறியவர் 'அறிவாற் சிவனுவார' என்று போற்றப் படும் சைவ சமயாசாரியர் நால்வருள் ஒருவரான மாணிக்க வாசகர் எனின வேறு யார் என்ன கூறவேண்டும்! ஆனறோர் கூற்றை வேதவாக்கு என எண்ணி நம்பிக்கை கொள்ள வேண்டும்.

பல பிறவிகளில வருந்திய நம் ஆனமா அவ்வப் பிறவி களில் செய்த புண்ணியப பயனுல் உயர்ந்ததாகிய மானிடப் பிறவியை எய்திற்று என று உணர்ந்தால், 'அனைத்துலக மாய நின்னை ஐம்புலன் காண்கிலா'மையே காரணம் ஆகும் என்பதும், 'சிந்தை செய்கை கேளவி வாக்கு சீரில் ஐம்புலனகளான, முந்தையான கால நினனை யெய்திடாத மூர்க்கனேன்' ஆக இருந்தனன் என்பதும் புலனுகும். அநநிலையில் 'தனித்துணை'

மெய்ம்மையரில் ஒனறுயேல், மெய்வலிதான் தேய்ந்துவிடும்;
பொய்யோ, உடம்பையும் பொலிவழிக்கும் நிச்சயமே.

நீ, வினையேனுடைய மனத்துணை நீ' என்று உணர்ந்து கூறும் இயல்பு உண்டாகும். அப்பொழுது, 'நினைப்பதாகச் சிந்தை செல்லும்,எல்லையேய வாக்கினுல் தினைத்துணையும் ஆவதில்லை' என்னும் அருமை புலனுகும். புலனுகவே, 'தன்மை பிறரால் அறியாத தலைவா' என்று வாய் தானுக மொழிந்திட, இறைவன பெருமை உணர்ந்து நெஞ்சங் கரையும். 'உள்ளத் துணர்ச்சியில் கொள்ளவும் படான்' என்ற உண்மை புலனுகும். அந்நிலையில் மெய்யுணர்வு தோன்ற, 'அழிதரும் ஆக்கை ஒழியச செய்யும் ஒருபொருள்' என்று இறைவன் இயல்பு விளங்கும். அப்பிரான் தான 'மூலமாய மும்மல மறுக்கும் சோதி' 'மீண்டு வாரா வழியருள்பவன்' எனபதும், 'பத்திசெய் யடியாரைப் பரம்பரத் துய்ப்பவன்' என்பதும் தெளிவுற விளங்கும். தூய அறிவெய்தப் பெற்று 'என்னை ஆளுடை பாதம் போற்றி' என்றும், 'என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா' என்றும், அப்பெருமானை வாய துதிக்கும். அந்நிலையில் இறைவனை வழிபாடு செய்யவேண்டும் என்ற விழைவு தோன்றும். தோன்றவே, 'அருச்சனை வயலுள் அன்பு வித்திட்டுத், தொண்டர் உழவர் ஆரத் தந்த, அண்டத் தரும்பெறல் மேகன்' என்ற உண்மை வெளிப்படும். அன்பு கொண்டு பத்தி செய்வாராய் அணிமலர் கொண்டு அருச்சனை புரிவார்க்குக் கைம்மாறு கருதாமல், தன் இன்றியமையா மையைப் புலப்படுத்தி மழையைப் பொழியும் மேகம் போன்ற வன் இறைவன் என்பது நன்கு விளங்கும். தமிழ்மறை யாகிய திருக்குறளில் கடவுள் வாழ்த்தை அடுத்து 'வான் சிறப்பு' என்னும் அதிகாரத்தை அமைத்ததும் இறைவன் கருணையே மழையாகப் பொழிகின்றது என்பது புலனுதற்கே அன்றோ! இறைவனை 'மழையவன்காண்' என்று ஆன்றோர் கூறுவதும் உணரத் தக்கதே.

பாண்டம் பழுதாமேல் பால்சுவையில் மாறுதல்போல்,
வேண்டா தவர்உறவால், வீறுகுலம் தேய்வுறுமே.

இறைவனிடம் அன்பு பெருகப் பெருக அவனது அருமை பெருமைகள் வியக்கத் தக்கனவாய்ப் புலனாகும். 'உனை எனதுள் அறியும் அறிவைத் தருவாயே' என்று மனம் விழைந்து கேட்கும். அப்பெருமான எம் முகூர்த்தத்தில் ஏதோ அவசரத்தின் காரணமாகக் கோலம் வேருகக் கொண் டிருப்பினும் பரம்பொருள் ஒன்றே என்ற உணர்ச்சியும் தோனறும். இறைவன் திருவடியே ஞானம் என்பதும், அதுவே சக்திபீடம் என்பதும், அதுவே அடைதற்குரிய மெய்ப் பொருள் என்பதும், அதுவே ஆன்மாக்கள் ஒடுங்கிப பெயர்ந்து வாராத பெருநெறியான வீடு என்பதும் புலனாம். வேதங்கள் எல்லாம் அப்பெருமான் திருப்பாதப போதுகளையே நாடு கின்றன. 'ஆரணங்கள் தாளை நாட,' அத்தாள்களின் பெருமைகளோ சொல்லுக் கடங்காது திகழ்கின்றன. முருகனும் சிவனும் ஒருவனே. அவசரத்தால ஏற்பட்ட கோலம் வேறன் றிப் பிறிதனறு. "சிவ வடிவங் காட்டும் சற்குருபர......... திருவளர் செந்திற் கந்தப் பெருமாளே' என்று ஆன்றோர் உரைத்ததும் அறிதற்பாலது. எனவே, 'உன் சிலம்பும் கனக தண்டையும் கிண்கிணியும் ஒண் கடம்பும் புனையும் அடி' எனறு வாய் வாயாரக் கூறும். "பிறவிக்கடல் விட்டு உயர் கதியைப் பெறுதற் கருளைத் தரவேணும்'' எனறு உள்ளங் குழைந்து நின்று உருகி விழைந்து கேட்கும் இயல்பு மேவு மனரே!

(தொடரும்)

மெய்ம்மை புகழளிக்கும், மதியாமை தீமையதாம் :
பொயம்மை மயக்கம், குருடாக்கிப் போக்குமரோ

ஐப்பசி—தாய்மையின் வெற்றி

(ஆ. கி. ரங்கராஜன்)

இறைவன் உயிர்கட்கு கருணை செலுத்தத் தாயாகவும், தண்டித்துத் திருத்தத் தந்தையாகவும் அம்மையப்பனென விளங்குவதாக ஆன்றோர்கள் கண்டுள்ளனர். அனைத்தையும் உண்டாக்குபவன் அவனே ஆதலால், அன்னையினும் தயவுடையோன் ஆண்டவனே ஆவன. அதற்கென அவனியில அவன் ஆற்றிய ஆடல்கள பல:

தனது படைப்பில் தோனறிய அரக்கன் ஒருவன அரிய தவம் புரிந்து ஆண்டவனிடம் பல வரங்களைப பெற்றனன். அன்னையின கரத்தால் அன்றி, பிறராலும், பிறவற்றாலும் மரணம் நேரக் கூடாதென்பது அவ்வரங்களில் ஒனறு. ஏன் அவ்வாறு பெற்றுனெனில், அன்னைக்குத் தன சிசுவைக் கொலல மனம் வராது அல்லவா ? அதனால் எத்தனை கால மாயினும், சுயேசசையாக இருக்கலாமென்ற எண்ணமே அது.

அரக்கனது செயல்களுக்கேற்ப அவனுக்குப் பெயரும் 'நரகன்' என்று அமைநதது. ந - அழித்தல. ர - ரமித்தல் க - கடத்தல். வரமகிமையால் அவன் ஆயுள் வளர்ந்தது. வலிமை வரைகடந்து நினறது. தன்னை எதிர்பபார் எவருமற்ற காரணத்தால், மதகரி போனறு தன்னிலும் எளியார் பால் சென்று அவர்களை அலைக்கழித்தலும், அவர்தம் அரிவையரைக் கவர்தலும், கற்பைப் பறித்தலும், அடங்காதவரைச் சிறைபி லிட்டு இம்சித்தலுமே தன் தொழிலாகக் கொண்டனன்.

இதனால் உலகில் மாதர் அறமும், வேந்தரின மறமும் அழிந்து நீதியும் நேர்மையும் நிலைகுலைந்தன. மாந்தரும் வேற்றுலகோரும் தம் காபபு அற்று இறைவனைச சரணடைந்தனர்.

அடித்தாலும், பாகனை யானை சுமக்கும்
இடைபுடைசெய மாற்றாரை, எனறும்நம் பொண்ணுதே.

தர்மமுறைப்படி தனயனெனினும் தவறுசெய்தவனுயின் அவனைத் தண்டித்தலே தகுதி என்பதைக் கருதிய இறைவன், பெண்மையின் அலறலைக் கண்டு பெரும் சீற்றம் கொண்டனன். பூர்வத்தில் அவனது தாயான பூமிதேவியின் அவதாரமாகிய சத்யபாமை எனும் தனது தாய்மையான அம்சத்துடன் அவனுடன் பொருது அக்கொடியோனை அழித்தனன். அந்த நன்னாளே இம்மாதத்தில் அமரபட்ச சதுர்த்தசி திதியின் பின் இராக்காலமாகும். அழிவுகாலத்தில் அறிவுபெற்ற அரக்கன் தனது கொடுமைகள் நீங்கப்பெற்ற இந்நாளை உலக தர்ம விடுதலை நாளாகக் கொண்டாடுமாறு இறைவனை வேண்டிக் கொண்டனன். இந்நாளே தீபாவளியாகும்.

வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்ற பழமொழிப்படியே ஆதிமுதற்கொண்டு உலகம் இயங்கி வருகிறது. தமது முயற்சியின் இறுதிவெற்றி இறைவனருளால் கிடைத்தது என்பதை வலியவர் மறந்து, அவனியில் தம்மைவிட உயர்ந்தோர் எவருமில்லை என்று இறுமாந்து இறுதியில் அவலமெய்துகின்றனர்.

தவ மகிமையால் சிவபிரானருள் பெற்ற தக்கன அகந்தை மேலிட்டு அவனைப் பகைத்துக கொண்டனன். இறைவனுக்கே முதலில் அவிசு தரும் யாகமொன்றை இறைவனைப புறக்கணித்துப் புரிந்தனன. அவனுககு அஞ்சிய அமரர்கள் இறைவனின் அனுமதியினறியே அவனது அவிசைப் பெறறனர். சீறிய சிவனின் சினம் தக்கனையும் அவன் யாகத்தையும் சிதைத்தது. இறைவனை அலட்சியம் செய்த இமையோரின் தீவினை காசிப முனிவரின புதலவர்களாய் உருவெடுத்தது. சூரபத்மன், சிங்கமுகன், தாருகன எனும் அம்மூவரும் அகில உலகங்களனைத்தையும் ஆகரமித்து அளவற்ற காலம் அட்டூழியங்கள் புரிந்தனர். அமரருலகை எரித்தனர். இன்னல் சகியாத உலகினர் கதறிக் கண்ணுதலோனைத் தஞ்சமடைந்தனர்.

அடித்தாலும், சேய் தாயை அம்மாஎன் றேயலறும்
நடிக்கும்நய வஞ்சகரால் நாடுகே டாகும்மே.

பிற உயிர்களையும் உலகோரையும் கொடுமைப்படுத்தும் அத் தீயவர்களின் செயலகண்ட அம்மையப்பனுகிய இறைவன் உள்ளம் கொதித்தது. அதன் விளைவாய் விளைந்த கனல் கந்தனுகிப பிரகாசித்தது! கண்ட அரக்கர் கலங்கினர். கந்தனை அழிக்கவும் கருதினர்.

இறைவியின் கருணைவேல பெற்ற கந்தன் குன்றுருக் கொண்ட கொடியோனைக் கொனருன். தாரகனுதியரை மடித்தான. போர் தொடர்ந்தது. ஈரொன்பது ஆண்டுகட்குப் பின் கடல் நடுவே மாமரமாய் நின்ற சூரபத்மனைப பிளந்தான. ஞானவேல் அவனுக்கு ஞானமுட்டியது. மயிலும் சேவலுமாகிக் கந்தனிடமே சரணபுகுந்து சூரபத்மன் அடைக்கலம் பெற்றனன. அமைதியும், ஆனந்தமும், அறநெறியும் நிலவி நிலைபெற்றன.

உலகிற்கெலாம் உய்திதரும் இப் புனிதநாள் ஐபபசி மாதம் வளர்பிறையின் ஆரும் நாள் ஆகும். கந்தப்பெருமானது மாபெரும் ஆற்றல் நிகழ்ந்த நாளாகிய இதைக் கந்தசஷடி எனப் பெரியோர் வழங்குகின்றனர்.

ஒண்டொடியர் அனைவரும் உத்தமக் காவிரியில நீராடி உன்னத உயர்வு பெறுவது இம் மாதமேயாகும்.

உலக அனனையாம் இறைவி, இம்மை மறுமை இரண்டிற்கும் அருளும் இறைவனுடன் ஒனறிக் கலக்க தவம் புரிந்து வெற்றிகொண்டது இம் மாதமேயாம். இதை,

அதிசய மான வடிவுடையாள்; அரவிந்த மெல்லாம்
துதிசெய வானன சுந்தரவல்லி; துணைஇரதி
பதிசெய மான தபசய மாகமுன பார்த்தவர்தம்
மதிசெய மாக வன்றோ வாம பாகத்தை வவ்வியதே

என வரும் அபிராமி அந்தாதியின் பதினேழாவது பாடல்மூலம்

நடுங்கும் படி,தீய செயயார்கள் நட்டோர்,
இடுங்கும் படிபுரியும் ஏதிலர்கள், பாவியரே.

அறியலாம். இதற்கு இறைவி அனுஷ்டித்த விரதம் கேதார கௌரி விரதம் எனப்படும்.

இவ்வாறு பற்பல சிறப்புகளால் பெண்மையாகிய தாய்மை வெற்றி கண்டு உயர்வுபெற்றுப் புனிதமடையும் இந்த ஐப்பசி மாதந்தை நாம் மகிழவோடு வரவேற்றுக் கொண்டாடுவோமாக!

வேய்க்குழ லோனும் வேற்கரத் தோனும்
வென்றிகொள் துலையாம் நற்றிங்கள் இதனைத்
தாய்க்குலம் கொண்டிடும் தயைபெறும் உயர்வென
சாற்றுவர் ஆன்றோர் தரணியின் மிசையே!

பெரியபுராணச் சித்திர விளக்கம்

நேச நாயனார்

(கி. வா. ஜ.)

யாரிடத்திலாவது ஒருவருக்கு அன்பு விழுந்து விட்டால் அவருக்கு ஏதாவது நன்மை செய்துகொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணம் வரும். குழந்தையினிடம் அன்புள்ள அன்னைக்கு அதற்கு உணவு ஊட்ட வேண்டும், அதை உறங்கச் செய்ய வேண்டும் என்ற எண்ணங்கள் எழுகின்றன. குழந்தை வளர வளர அதற்கு வண்ண வண்ண ஆடை அணியவேண்டும் என்று எண்ணி முயலுகிருள். பலவகை அணிகளைப் பூட்டுகிருள். தம்மினும் உயர்ந்த நிலையில் உள்ளவர்களிடம் தாழ்ந்த நிலையில் இருப்பவர்கள் அன்பு பூண்டால் அவர்களுக்கு எப்போதும் ஏவல் செய்து கொண்டே இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவார்கள்.

நகைநன்மை நண்பரிடம், நல்லவையுள் அன்புண்மை
இகநன்மை வேந்தனிடம் என்பார்கள் மேலோரே.

சிவனடியார்களிடம் ஈடுபாடுடையவர்கள் தம்மால் ஆன தொண்டுகளை அவர்களுக்குச செய்து கொண்டே இருக்க வேண்டும் என்று விரும்புவார்கள். பணமுடையார் பணம் அளிப்பார்கள்; சோறளிப்பார்கள். எநதப் பொருளேனும் தம்மிடத்தில் பிறருக்கு உதவும்படி யிருந்தால் அதை அடியார் களுககு அளிக்க விரைவார்கள்.

காம்பீலி எனனும் பழம்பதியில் வாழ்ந்த நேச நாயனர் சிவனடியார்களிடம் ஆழ்ந்த நேசம் உடையவராக விளஙகி ஞர. அவர் நெய்தல் தொழில் செய்பவர். சிறிதும் பாவம் இல்லாத தொழில் அது. திருவள்ளுவர் மேற்கொண்டிருநத தொழில். இறைவன் தமக்கு அத்தொழில் செய்யும் வாய்பபை அளிததது, சிவனடியார்களுக்குத் தொண்டு புரிவதறகாகவே எனறு உளம் கொனடார் நேச நாயனர்.

எபபோதும் இறைவனைத் தியானிப்பதும், அவனுடைய திருவைநதெழுத்தை ஓதுவதும், தமக்குரிய கைத் தொழில திறமையால சிவனடியார்களுக்கு வேணடிய ஆடைவகைகளை நெய்து வழங்குவதுமாக மூன்று கரணஙகளாலும் திருத தொண்டு புரிநது வந்தார் அவர். சிவனடியார்களின விருப் பத்துக்கு ஏற்ற ஆடைகளும், இடுப்பில் அரைஞாண கயிறு போலக்கட்டும் கீளும், கோவணமும் நெய்து வழங்கி வந்தார்.

நேச நாயனர் ஆடை நெய்து வழங்குவதை அறிந்து பல சிவனடியார்கள் அவர்பால் வந்து தமக்கு வேண்டியவற்றைப பெற்றுச் சென்றுர்கள்.

இவ்வாறு வாழ்நாள் முழுவதும் இடையருது திருத் தொண்டு செய்து வாழ்ந்து இறுதியில் இறைவன் திருவடி நீழலை அடைந்து பேரானந்தப பெருவாழ்வு பெற்றுர் நேச நாயனர்.

அஞ்சுவதற் கஞ்சி, ஆம்உதவி செய்துலகில,
நெஞ்சறியச் சாயாது நேர்மைநிலை நில்மனமே!

பாம்பனடிகளும் பன்னிருகைப் பெருமானும்

(திருப்புகழ்சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A.,B.T.)

மக்களுக்குறும் பிணிவகைகள் :

மக்களுக்கு, உண்டாம் பிணிகளை மூன்று வகையாகக் கூறலாம். அவை (1) உடலுக்கு வருவது. (2) உள்ளத்துக்கு ஏற்படுவது. (3) உயிருக்கு நேர்வது.

உடலுக்குண்டாகும் பிணிகள் கணக்கில் அடங்கா. நோயற்ற வாழவே குறைவற்ற செல்வமாதலால், உடலால் வரும் பிணிகளைப் போககுவதும் அவசியமாகும் என்பதை உணர்ந்த நம் அருணகிரியார்,

" இருமலு ரோகம் முயலகன் வாதம்
எரிகுணநாசி—விடமே நீர்
இழிவுவிடாத தலைவலி சோகை
எழுகளமாலை—இவையோடே
பெருவயிறீளை எரிகுலை சூலை
பெருவலி வேறும்—உளநோய்கள்
பிறவிகள் தோறும் எனைநலியாத
படியுன தாளகள்—அருள்வாயே "

என்று திருத்தணிகேசனிடம் ஒரு பெரும் நோய்ப் பட்டியலையே சமர்ப்பித்து விட்டார். இங்குக் குறித்தன போல்வனவும் உடலை வருத்தும் நோய்கள்.

உள்ளத்திற்கு வரும் நோய்கள் :

" மால் (மயக்கம்), ஆசை, கோபம் ஓயாது எந்நாளும் " என்றபடி மயக்கம், காமம், கோபம் என்பவைகளும், இவற்றினைத தொடர்ந்துவரும் லோபம், மோகம், மதம், மாற்சரியம் எனபன உள்ளத்தை வருததுவன.

அனபர்களை ஏவியபின், *ஆராயா தனனவரை*
இனபுறுத்தில், எச்செயலும் இனிதுநிறை வேறுமரோ.

உயிரிலுறு நோய் :

உயிருக்கு உற்ற நோய் என்பது பிறவி நோயேயாம்.

பரிகாரங்கள் :

உடலுக்கு வரும் நோய்களைப் பலவகை மருந்துகளாலும் மருத்துவர் உதவியாலும் நீககலாம். உள்ளத்திற்கு உண்டாகும் நோய்களையும் அவற்றால் வரும் கவலைகளையும் நீக்கவேண்டு மானாலும், பிறவி நோயினின்றும் விடுதலை வேண்டினாலும் ஆண்டவன் அடியிணையையே அடைக்கலம் ஆகவேண்டும்.

"தனக்குவமை இல்லாதான தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது."

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் ; நீந்தார்
இறைவ னடிசேரா தார்."

என்ற வாக்குகளை நோக்குக. பவநோய் நீக்கும் பாங்கினால் தான் தணிகைநாதனைப் 'பவரோக வயித்திய நாதப் பெருமான்' என்கிறார் நம் அருணகிரிநாதர். உள்ளிருந்து வருத்தும் உளப் பிணியாகிய கவலையையும் உயிர்ப்பிணியான பிறவியையும் ஒழிக்கவல்ல திருமுருகனுக்குப் புறத்தே காணும் உடலுக்கு உண்டாகும் பிணியை மாற்றுவது பெரிய காரியமோ ?

அடிகளார்க்குற்ற பிணி

பாம்பனடிகள் சென்னையில் வதிந்தபோது ஒரு சமயம் அவருடைய தொடையிலும் அரையிலும் இரண்டு கட்டிகள் தோன்றி மிகவும் துயர்செய்தன. ஆற்றொணாத துன்பத்தி லழுந்திய அடிகள் கந்தபிரானிடம்,

'சடைக்கற்றை தாங்கு உவ்விச் சங்கரனார் தந்த தங்க அயில்
படைக்கை எந்தாய் அறியாமையின நானசெய்த பண்டைவினை
தொடைக்கட்டியோடு அரைக்கட்டியுமா னனிதோன்றி என்னை,
நடக்க வொட்டாது செய்கினறது சென்னைநகர் தனிலே "

என்ற பாட்டால் விண்ணப்பித்துக் கண்ணீருகுத்தார்.

பிணிதீர்த்த பேரருள்

அன்றிரவு சிவகுமரன் ஓர் சிறுபிள்ளையாய் வந்தான். அல்லலுற்றயரும் அடிகளார் கட்டியினமேல் மருந்து எடுத்து ஈனருய்ப் பூசி மறைந்தான். இது அவ்வில்லத்திலிருந்த ஜக தாம்பாள என்ற அம்மையின் கனவினுல் தெரியவந்தது. காலையில் கட்டியுடைந்திருந்தது. அம்மை தன் கனவை *அடிகளாரிடம் கூறினுள். அடிகளாரும் வேலனுா திருவிளை* யாடலை வியந்து, ''.......செனனைசேர் வாசியான காலூரு மீது கோள்மருவு கட்டி நைவுற நல் அறபுறை பூசிநின்ற வோர் பிளளையே'' என்று பாடிப பாராட்டினர். இவ்வாறே முருகப் பரமன் மற்ருேர் அனபர்கமும் தனது திருக்கரத்தால் மருந்து பூசி நோய் நீக்கி யருளியதுண்டு.

துரைசாமிக் கவிராயர்:

அனனைபோலும் தயவாளர் வாழும் சென்னைமா நகரில் இராயபுரம் எனற பகுதியில் வாழ்ந்தவர் துரைசாமிக் கவிராயர். இவர் திருவொற்றியூர் வடிவுடை அம்பிகை அருளால் பல அற்புதஙகள் செய்யப்பெற்ற காமியப்பக் கவிராயரின் அருமந்த புதல்வர் பழநியாண்டவர் கீர்த்தனை முதலிய பக்தி ரசப பாடல்கள் பாடிய பாவலர். சென்னை புஷ்பரதச் செட்டியார் நடத்திவந்த அச்சகத்தில் வேலைபார்த்திருநதவர். இவர் வீட்டில் பழநியாணடவர் திருவுருவப் படமே இவர் வழி படுதறகென அமைநதது. இவா நாளதோறும் காலையும் மாலையும் பழநிப் பெருமான திருமுன்பு நினறு வழிபாடு செய் யும்போது. கலலையுமுருககும கவிகளைப் பாடிக் கண்ணீர் சொரிந்து நிற்பார். இவரது வாழவில் சீரார் பழநி தெய்வப்

செயற்பால அல்லாத சொலலுதலும் குற்றம்:
கொலைபபாலர் பேரைச், கூறுவதும் ஆகாதே.

பெருமான் செய்த திருவிளையாடல்கள் மிகப்பல. அவருக்கு அண்டவாதம் என்ற பீஜநோய் வந்தது. அது குத்தலும் குடைச்சலுமாய் இவரை நடக்க ஒட்டாமல் பெரிதும் துன்புறுத தியது. அதிக பொருட்செலவு செய்ய வசதியில்லை. வேறு மருத்துவத் துணையும் பெறுதற்கு மனம் எழவில்லை. ஆதலால்

" சரவணோத்பவா—ஏழைதன்னை ஆளவா
பரவுமானவா—எங்கள்—பழனிவேலவா "

என்று இரவெல்லாம் பாடிப பாடிப் பரவினார். நோய் மேலும் மேலும் மிகுவது கண்டு தாஙகமுடியாமல்,

" அடிமைக் கிரங்கி யருள் முருகையா—ஐயா
ஆதரிப்பார் யாருமில்லை முருகையா "

என்றே கூறிக் கண்ணீர் சொரிந்து கதறினார்,

பழநிநாதன் அருளிய பண்பு

சுமார் 2 மணி வரையில் நோய் தாங்காது விழித்திருந்த அவர் எப்படியோ கொஞ்சம் உறங்கிப் போனார். அபபோது நெற்றியில நீறும் நீண்ட சட்டையும் அணிந்த ஒரு இளைஞர் கவிராயர் முன தோன்றினார். கவிராயரும் ' இநத இளைஞர் யாரோ ? இவர் ஏன் இங்கு வந்தார் ? என்ன செய்யப போகி றார் ? என்றெல்லாம் நினைக்கலானார். உடனே அந்த இளைஞர் தமது இடதுபக்கமுள்ள சட்டைப பையிலிருந்து ஒரு மருந்து புட்டியினை எடுத்தார். ஒரு குச்சியில பஞ்சு சுற்றியிருந்தது. அதனைத் தமது வலதுபுறச சட்டைப் பையிலிருந்து எடுத்துப் புட்டியை திறந்து அந்தக் குச்சியினால் மருந்தில் நனைத்து இவ ரது பீஜததின்மேல் நனறாகத் தடவினார். பிறகு இந்நோய் இரண்டே நாளில் குணப்படுமென்றார். இதுகேட்ட கவிராயர் கைகுவித்து வணங்கிய வண்ணம், "தாங்கள் செய்யாமற் செய்த

கோல்நோக்கி வாழும் குடியெனபர், தாயின்முலைப்
பால்நோக்கி வாழும் பாலகர்போ லன்னவரே

இவ்வுதவிக்கு எளியேன் என்ன கைம்மாறு இயற்றப் போகி றேன்'' என்று கண்ணீர் வடித்துக் கதறினர். உடனே இளை ஞர் 'பழநிக்கு அன்னக் காவடி கட்டிக் கொண்டு வந்து செலுத்து' என்று சொல்லி மறைந்தார்.

அன்னக்காவடி :

கவிராயரும் கண் விழித்தார். கண்டது கனவா நனவா தெரியவில்லை. தமது பீஜத்தின்மேல் ஏதோ தைலம் பூசப் பட்ட உணர்ச்சியிருந்தது. இரண்டாம் நாளில் நோய் முற்றி லும் குணமடைந்தது. ஆனல் பழநிக்கு அன்னக் காவடி செலுததுவது எப்படி என்று கவிராயர் கலங்கினர். ஏழைக் கிரங்கும் இளம்பூரணன் அதற்கு வேண்டிய எல்லாப் பொருள் களையும் பல அன்பர்களைக்கொண்டு வலியத் தாமே உதவுமாறு செய்தார். அனனக்காவடி கட்டிப் பழநிக்குப்போனதும் பழைய சோற்றை ஆண்டவன்முன செலுத்தக் கூடாது என்று ஆலய அதிகாரிகள் தடைசெய்தனர். கவிராயரும்,

"மகிமை பொயயா மலைக் குழந்தை வேலய்யா'' என்ற ஒரு பாடல் பாடினர். உடனே அந்தச சோறு அப்போதுதான் வடித்ததுபோல ஆவி கிளம்ப நிற்பது கண்டு அனைவரும் அதி சயிதது அருளைப் போற்றினர். இவரது விரிவான வரலாற் றினை "அதிசயமநேகமுற்ற பழநி'' என்ற கட்டுரையில் அமிர்தவசனியில் முன்பே அடியேன் எழுதியுள்ளேன். அன் பர்கள் அதனை வாசித்து அறியலாம்.

இதனல் நம் மயிலேறும் மழவன் தன் அடியார்களது பவப் பிணிக்கன்றி உடல் பிணிக்கும் மருத்துவம் புரிந்த அற் புதங்கள் அநேகம் உண்டு என்று தெரிகிறது.

வானமழையை நோக்கியுயிர் வாழும்;பா முங்கூற்று
தான்சாய்க்க எண்ணும், தரணிப் பெருமையிதே.

நமது கடமை

(வித்வான் G. சுப்பிரமணியன்)

இவ்வுலக வாழ்வில் யாவரும் தம் உரிமையை நிலை நாட்டவே விரும்புகின்றனர். கடமையைப் பற்றி நினைக்கவும் மறந்து விடுகின்றனர். கடமையை எவனேனும் எடுத்துக் காட்டுவானேயானால அவன் யாருக்கும் விரோதி ஆகும் நிலையை அடைகிறான். நீதிமுறைப்படி எதை அவன் கொடுக்க வேண்டுமோ அது அதனது கடமையைச் செய்தால் தான் உரிமையைப் பெறமுடியும். முற்றிய கடமைகளே உரிமையைத் தருகின்றன. ஆகவே நாம் நம் கடமையைக் காத்துக் கொள்ள வேண்டும்.

அப்படியானால் நம் கடமை யாது ?

நாம் தற்பொழுது மானிடராக வாழ்கின்றோம். இப்பிறவி நமக்குக் கிடைக்க நாம் எத்தகைய புண்ணியம் செய்துள்ளோமோ ? அதிலும் உறுப்புகளில் எவ்வித குறைவும் இன்றித் தோன்றியதை நினைத்தால நமக்கே பெருமிதம் உண்டாகிறதல்லவா ? இனி வரும் பிறவிகளிலும் நாம் மனிதராகவே பிறப்போம் என்ற நியதி உண்டா எனின் அதுவும் இல்லை. இதனையே "அரிது அரிது மானிடராதல அரிது" என ஔவையார் கூறுகின்றார். "எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினும் அரிதரிது காண், இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ, ஏது வருமோ அறிகிலேன்" என்று கரைகிறார் தாயுமானவ அடிகள். "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப் பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி ....எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்" என்று உருகுகிறார் மணிவாசகப் பெருமான். இவ்வளவு சிறந்த இப்பிறவியின் பயனை நாம் அடைகிறோமா ? பத்துமாதம் தவம் செய்து

கற்றால், அறியாமை தானே கரைந்துவிடும் ;
அற்றுப்போம் புல்லறிவு ; இயற்கை யறிவெழுமே.

பெற்ற இவ்வுடலை—ஓட்டைப் பானையைக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டு உடைத்து விடுகிறேமே! என்ன கொடுமை!

நாம் மிக்க அழகான தென்று கருதும் இவ்வுடல், காற்றடைத்த பை அல்லவா? எலும்பும் நிணமும் நரம்பும் சேர்த்து இழுத்துக் கட்டிய கூடு அல்லவா? இறைவன் ஒருவனைத் தவிர வேறு யாராலும் படைக்க முடியாத இவ் வீட்டில் இறைவன் தானே குடியிருக்கிருன் அன்றோ? இதனை நாம் உணராது, நான், நீ என்று அகந்தை கொளவதும், அங்ஙனமே உளள பிற உயிருககு ஊறு நினைபபதும் செய்வதும் கூடாதே! இதனைக் கருத்தில் கொண்டே "பகைவனுக் கருள்வாய் நன்னெஞ்சே-பகைவனுக்கருள்வாய் ..பகை நடுவினில அன்புருவான நம் பரமன வாழ்கின்ருன்" எனருர் பாரதி.

இவ்வியாக்கையின நிலையை நாம் அறிந்தவர்கள்தான. எண்ணற்ற உயிர்கள் பிறக்கினறன. அழிகின்றன. நேற்று உள்ளவன் இனறு இலலை எனறு கூறப்படுவதே இவ்வுலகின் சிறப்பாகப பொதுமறை கூறுகிறது. "இன்றைக் கிருப்பாரை நாளைக் கிருப்பரெனறு எண்ணவோ திடமிலலை" "தூங்குகையில் வாஙகுகினற மூச்சு, அது துயில் மாறிப் போனாலும் போச்சு" "உறங்குவது போலும் சாக்காடு" "பிறந்தவர் சாதலும் இறந்தவா பிறத்தலும் உறங்கலும் விழித்தலும் போன்றது" என்ற தொடர்களள இவ்வுடலின நிலையினை நன்கு கூறும். மேலும் இவ்வுடலோ பல நோயகளுக்கிருப்பிடம்; உடன் பிறந்தே கொல்லும் வியாதிகளைக் கொண்டது. இத்தகைய இழிநிலையை உடைய இவ்வுடலை எடுத்த நாம், "நாச்செற்று விககுள்மேல் வாராமுன" செய்ய வேண்டியவை யாவை?

"குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்

இயற்கை தனையுணர, இனபஅருள் தான்தோன்றும்;
மயற்கையறும்; வீட்டின்பம் மன்னும் மரபிதுவே.

நாணணி களையும் மாண்எழில் சிதைக்கும்
பூண்அணி மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி " —மணிமேகலை

முன்பு பூண் அணிந்திருந்த மனைவியோடு இபபொழுது 'செல்வர் வீட்டு வாசலிலே நிறுத்தி விடும் பசி. அபபப்பா! மிகக் கொடுமை. இதை நினைத்தே வள்ளுவர், பிச்சை எடுத்தே ஒருவன் வாழ வேண்டுமெனப் பிரமன் விதித்திருந்தால், அவனே பிச்சை எடுக்கும் தொழிலைச் செய்து பார்க்கட்டும்' என்று கூறுவது போல்,

' இரநது உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.'

என்று கூறுகிறார்.

இங்குத்தான் நம் முதற் கடமை தோன்றுகிறது. 'ஐயம் இட்டு உண்.' 'மருந்தே ஆயினும் விருந்தோடு உண்' (மருந்து-அருமருந்து-அமிர்தம்:) இதுதான முதற் கடமை. ஒவ்வொரு வரும் தாம் உணவுண்ணும் நேரத்தில் வருபவருக்குச் சிறி தேனும் கொடுத்து உண்ண வேண்டும். திருமூலரும் " யாவர்க் கும் ஆம் உண்ணும் போது ஒரு கைப்பிடி " என்று கூறு கினறார். பொருட் செலவம் தேடிய ஒருவன் அதனைப பத்திர மாக வைக்க விரும்பினால பொருளற்ற வறியவரது பசியைப் போக்க அச் செல்வத்தைப் பயன் படுத்த வேண்டும். ஏனெ னில் செல்வம் என்ற பெயரே, நான் உன்னிடமிருந்து சென்று விடுவேன்' என்று கூறுவது போல இருக்கிறது. மணிமேகலைக காப்பியத்தின் முக்கிய நோக்கங்களில் மிக முக்கியமானது பசிப்பிணியைப் போக்கலே. அதனால் தான் " மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெலலாம், உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே " என்று சாத்தனர் கூறு

பள்ளத்தில் நீர்நிற்கும் ; பாவம் பழியரிடம் ;
தள்ளலுறும் காமம், தவமிலிக்கே சார்தருமே.

கிறுர். இத்தகைய அறவழியில் இல்வாழ்க்கையை நடத்துவோ மாளுல், துறவற வழியில் பஞ்சாக்கினி மத்தியில் நின்று துன்பப்பட்டுக் கரை சேர வேண்டியதில்லை.

மற்றும் ஒரு முக்கியமான கடமை நமக்கு உண்டு. அதுவே நம்மைப படைத்த கடவுளுக்கு நன்றி பாராட்டல். எவரிடமேனும் ஏதேனும் பொருளை நாம் பெற்ருல் நாம் அவருக்கு நன்றி பாராட்டும் கடமை உள்ளவர் ஆகிரும். நமக்குப் பல வகையிலும் உதவும் கடவுளைப் பற்றி நாம் சிந்திக்கிருேமா ? தற்கால இயந்திர உலகில் கடவுளை நினைக் கவும் நமக்கு நேரம் ஏது ?

புறநானூற்றுக்குக்கடவுள் வாழ்த்துப் பாடிய பெருந் தேவனுர், இறைவனது தட்சிணுமூர்த்தக் கோலத்தை அழகாக வருணித்துள்ளார்.

" நீர் அறவு அறியாக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த அருந்தவத் தோற்கே "

என்பது அப்பாடலின் ஒரு பகுதி. இறைவன் தவம் செய் கிருனும். ஏனே ? நாமெல்லாம் இறைவனை அடையத் தவம் செய்கிருேம். இறைவன் ஏன தவம் செய்ய வேணடும் ? நாம். பிறர் எதையேனும் செய்ய வேண்டுமெனறு எதிர்பார்த்தால் அதை நாமே செய்கையில் காட்ட வேணடும். அப்பொழுது தான் அதனைப் பிறரும் பின்பற்றுவர். வெறும் வாய்ச் சொல் பயன் தராது.

அழகான நாடகமேடை. பள்ளி விழா ஆரம்பமாகப் போகிறது. பெரியவர்களுக்காக நாற்காலிகள் போடப்பட்டுள் ளன. மாணவருக்குப் பாய் விரிக்கப்பட்டிருந்தது. மாணவர் கள் நாற்காலிகளில் உட்கார்ந்திருந்தனர். தலைமை ஆசிரியர் கண்டார். திகைத்தார். வேகமாகச் சென்ருர். மேடையைப்

கற்ற அறிவு, கவலையினிற் கைகொடுககும் ;
முற்றுணர்ந்த ஞானியிடம் உள்ளதிந்த மூதுரையே.

பார்த்துப் பாயில் உட்கார்ந்தார். மாணவர்கள் கண்டனர். வரிசையாகத் தலைமை ஆசிரியர் பின பாயில் உட்கார்ந்து விட்டனர். இபபொழுது பெரியவர்கள் நாற்காலிகளில உட்கார முடிந்தது. ஆகவே, பிறர் எதைச் செய்ய வேண்டுமென நாம் எதிர் பார்க்கிறேமோ அதை நாமே செய்ய வேண்டும்.

இம் முறையில், 'நாம் தவம் செய்து வீடு பெற வேண டும்' எனக் குறிப்பாக உணர்த்துவது போல் இறைவனும் தவம் செய்கிருன். ஆகவே நாமும் அவன் காட்டிய வழியே வாழ்ந்து அவன் அடிகளைப் பற்றுவோம்.

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி சேராப்
பெறுதற் கரிய பிராணிக ளெல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே.

—திருமந்திரம்

கணபதி தாஸர்கள் 19.

துராசதன்

(ரஸபதி)

கைவர்த்தக தேசத்தில பன்மகம் என்று ஒரு பட்டணம். அங்கு இருந்தான் ஒரு அசுரன். அவன் பெயர் பிரமசுரன். அருந்தவம் செய்த அவன்முன், உவகை காட்டி உருத்திரர் நின்ருர்.

பெரும! நான் எவர் தலையில் கை வைத்தாலும், அவர்கள் எரிந்து கரிந்திட வரம் அருளும் என்ருன். உலக தலைவிதியை உணர்ந்த உருத்திரர், அங்ஙனே ஆக என்று வரம் அருளினர்.

செல்வம் வலியளிக்கும்; சேர்கல்வி உற்றதுணை;
இல்லாமை துன்பம்; ஈகையின்பம் என்பாரே.

பாதக சாதகன், அதைச சோதிக்க நினைத்தான். உமது தலையிலேயே கை வைக்கிறேன்! ஒழிகிறீரா பார்க்கிறேன்! என்று உறுத்தான்.

அறிந்த உருத்திரர் அஞ்சினர். மாபெரும் பாவியான அவன் கண்கட்குத் தோன்றாது மறைந்தார். ஆத்திரம் கொண்ட அவன, அவரை எங்கும் தேடி அலைந்தான். அவன் வேகம் கண்ட வானவர் அலறினர்.

அதைத் திருமால் அறிந்தார். அநியாயனால் உலகம் அழியாதபடி, உடனே மாய மோகினி ஆயினர். அன்னநடை நடந்தார். அவுணனை அணுகினர். புனித ஜகனமோகன புன்னகை புரிந்தார். அவரது கடைக்கண நோக்கில் அவன், கனலிற்பட்ட மெழுகுபோலக கரைந்தான. விரகாக்கினி மேலிட்டு வெம்பினன. அறிவு இழந்த பிணம்போல ஆயினன். அணு அணுவாக அணுகினன.

பிரியம் விளைவிக்கும் பெண்கள் திலகமே! இனி நினைப் பிரியேன்! பிரிந்து ஒரு கணமும் தரியேன்! பாராய்! என்னொடு நீ வாராய்! என்று பாடி, கோதையைக் கைகுவித் துக் கும்பிட்டான. மேலும், காமாதுரமான கோடி வார்த்தை களைக் கொட்டினன.

அடடா! என்ன கூத்து இது? ஐயா! நான் நடிகை; நீர் வீராதி வீரர்; வில்லாதி வில்லர்; நான் வெறும் ஆட்டம் போடுபவள்; விஜயலட்சுமி உம்மிடம் விளையாடுகிறள். மலை போன்ற நீர், என் உறவால் மண்ணுக வேண்டா என்று, அதுங்கி ஒதுங்கினள் அந்த அணங்கு.

மாதரசே! அந்த விஜயலட்சுமி, உன்கால் பிடிக்கும் தகுதியள்! இசசைக் கனலால் நான எரிந்து போகாதபடி, ஏற்றுக் கொள் என்னை என்று, மேலும் அவுணன் இறைஞ்சினன்.

புகையெனனில தீயுண்டு; புனிதவுளம் முகப்பொலிவு;
நகுகுறிப்பால் அகப்பகையை, நாமறியல் ஆவதுவே.

ஆடும் தகுதி யிலாதவர், ஆடவர் எனும் பெயர்க்கு அருகதை யற்றவர். ஆடும் தகுதியுடைய அடியேன, மகத்தாக ஆட வல்லவரையே மணப்பேன.

பெண்மணி ! நீ அபிநயம் பிடி ! நானும் அப்படியே பிடிக்கிறேன. உன நடை கண்டவர்ககே நடனம் கைவரும் !

அப்படியா ! பார்பபம் என்று மாயமோகினி, ஜதி எழுபபிக் குதித்தாள். அவனும் அப்படியே நடித்தான்.

தா - தை - தரிகிட தகதிமி என்று ஆடினள் அவள். அவனும் அபபடியே ஆடினன. வாக்காலும் நோக்காலும் அவனே மயக்கிய வனிதை, அபபடியே பல கோணத்தில் ஆடி, வளேயல் ஒலிக்கும் கைகளே, தன தலேமேல் வைத்தாள்.

மங்கை அழகில மயஙகி, வரத்தை மறந்த மதியிலி, வளர்ந்த கைகளேத் தன தலேமேல் வைத்தான். அவ்வளவுதான. திரிபுர வாசிகள்போல், தீயவன் உடல் எரிந்து கரிந்து பொரிந்தது. மாய மோகினியான திருமால், ஒரு நாளோடு தொல்லே ஒழிந்தது என்று, மகிழ்ந்து அப்போதே மறைந்தார். முகுந்தன மறைந்த அந்த இடம், முகுந்தைபுரம் என்னும் பெயரை எய்தியது.

தன வரத்தால் தானழிந்தான பிரமாசுரன்.

அவன் மைந்தன் ஒருவன். அவன் பெயர் துராசதன். தந்தை அழிவைத் தநயன அறிந்தான. அழுது கதறினன. பழிஇ ! பழிஇ ! பழி வாங்குவேன! என்று, வீரிட்டுக் கூவி விறுவிறுத்தான.

குலகுருவான சுக்கிரன இருக்கும் இடம் தேடிச் சென்றன். அவர் திருவடியில் விழுந்து அழுதான். விவரம் உணர்ந்த அவர், அவனுக்குப பல ஆறுதல் கூறினர்.

துராசதா ! நமசிவாய மந்திரத்தை, ஆரம்பத்தில் நாற்பது கோடி உருவேற்று ! அதன்பின உனக்கு, வித்தக சித்திகள்

வருவதறி யாப்பெண்டிா, வாழ்க்கைக்கே நோயாவர்;
வரும்அக் குடிமக்கள், வளர்சசிதடை யாவாரே.

விளையும். அந்த சக்தியால், நீ நினைத்தது யாவும் நிறைவேறும் என்றார்.

அங்கிருந்து அகன்றான். ஒரு வனத்தில் அமர்ந்தான். காற்றையே புசித்தான். வரவர காயகல்பம் செய்தான். ஆரம்பத்தில நாற்பது கோடி. இடையில நானூறு கோடி. அந்தத்தில் நாலுலட்சம் கோடி. இப்படியே ஓயாது உருவேற்ற லாயினன. அதன் பயனாக, எங்கும் இலாத சக்தி, எவர்க்கும் இலாத ஆற்றல், அவன் உடலில் அமைந்தது. எழுந்தான். உயர்ந்த நிலை உருவானால், அந்த ஆக்க சக்தியால் உலகத்தைக் காப்பர் உயர்ந்தோர்.

அவனோ அசுரன். நெஞ்சில் பழம்பகை நிழலிட்டது. சிவ சக்தியைத் தவிர, அன்று அவனை வெல்பவர் இல்லை. தனி ஒருவனாய் எழுந்தான். அவன் நிலையறிந்த அகில உலக அவுணர்கள், பரிந்து வந்து அவன பக்கம் சேர்ந்தனர். காற்றும் நெருப்பும் கலந்த பிறகு, என்ன விளையும் என்று சொல்ல வேண்டுமா ?

மண்ணுலக மன்னர்களை, அடக்கி மடக்கினான. விண்ணுலக வாசிகளை, வெருட்டி விரட்டி வீழ்த்தினான. பாதல உலகரைப் படுகேடு செய்தான். எந்த உலகிலும், அசுர வீரர்களை இருத்தினான். காசிமா நகரைத் தலைநகர் ஆக்கினான். அரியணை ஏறினான். எஙகும் என்னதே ஆட்சியென்று இறுமாந்தான. ஓம் துராசதாய நம: என்று, தன்பெயரை எவரும் உருவேற்றுமாறு உணர்த்தினான். கட்டளையை மீற முடியாமல், ஒவ்வொருவரும் அவன் நாமமே ஓதினர்.

திருமாலும் பிரமனும் இருககும் இடம் தெரியவில்லை. வைதிக தேவர்களை, அவைதிகப் பணிசெய்ய ஆணையிட்டான்.

புல்லறிவர் புல்லுக்கே ஒப்பாவர் ; வன்னெஞ்சர்
கல்லுக் கிணையாம், கடியோர் கொடியோரே.

மோன முனிவர்களை, நிலத்தில் ஏரடிக்க ஏவினன். சித்தர்களை, அவுணர்கட்கு வேண்டியவைகளைச் சித்தப்படுத்தக் கட்டளையிட்டான. கற்பு நெறியினர் கலங்கினர். அருமை மேலவர் அழுதனர். அவைகளை யறிந்து, தடுமாறியது தரும தேவதை.

சேதாரம் இல்லாதது ஸ்ரீகேதாரம். அசுரர்கள் கண்ணுறங்கும் நேரத்தில், அமரர்கள் முதலானோர் அந்த இடத்தை அடைவர். வாம சக்தியை வழிபடுவர். கண்ணீரைக் காணிக்கையாக்கிக் கதறுவர்.

' அடியார் பீழை அறுத்(து,) அவர்கட்கு
அருளும் பொருளும் தருபவளே !
கொடியார் சுகத்தைக் குமைத்(து,) அவர்க்குக்
கோதில் கருணை சுரப்பவளே !
பிடியால வருந்தும் எமைப புரக்க
வேண்டும் வேண்டும் ; எக்காலும்,
முடியா முதல்வீ ? அடியோமை முழுத்த
அருள்செய் தளித்தருளே !

என்று, தூய பாடல் பல சொல்லித் துதித்தனர். உலகைப் புரக்கும் உமாதேவி, ஒருநாள பிரசன்னம் ஆயினள். விவரம் உணர்ந்த விமலை, உறுத்துக் கரித்து ஊங்காரம் எழுப்பினள்.

அந்த ஊங்காரத்தில் இருந்து ஓங்கார விநாயகர் உதயம் ஆயினர். அறிவோம் ! வருவோம் ! அராஜகத்தை அழிப்போம் எனறு ஆரம்பத்திலேயே அருளினர் அந்த ஆனைமுகர். உடனே திருவுருக் கரந்தாள் தேவதேவி.

வக்ரதுண்ட கணபதியை, வானவர் முதலினோர் வணங்கினர். பக்தர்கட்கு உரிய வித்தகா ! காணும் மனுநிகள் கடந்தவா ! புண்ணிய முதலே ! பூரண மூர்த்தீ ! ஜெயஜெய என்று பயன்தரும் துதிமொழிகள் பாடினர்.

அந்தணர்போல் நல்ல பிறப்பில்லை ; எனசெயினும்
தாய்போல் சிறந்த தமரில்லை கண்டாயே.

புனித கணபதி அப்போதே புறப்பட்டார். பூத சேனைகள் புடை சூழ்ந்தன. விரைந்த அவர்கள், அதி சீக்கிரத்தில் காசியம் பதியைக் கண்டனர்.

அவர்கள் வருகையைத் துராசதன் அறிந்தான. இமையவர் கள் செய்த சூழ்ச்சி இது! கால்கட்டும் கைகட்டும் விலங்கிட்டு, அவர்களைச சிறையில அடைத்து வைக்காமையே பிழை ! வந்தவர் உயிரை வாஙகுவேன! அமரர் செய்தியை அடுத்துக் கவனிக்கிறேன் என்று ஆரவாரித்தான.

எண்ணிலாத படைகளுடன் எழுந்தான். இருதிறப் படை களும் கைகலந்தன. பூத சேனைகள் நிலம் புரண்டன. தற்பர வக்ரதுண்டர் தனித்தார்.

ஏய் சிறுவா ! நீயோ எம்மை எதிர்க்க வந்தவன் ? உயிர் பிழைக்க வேண்டுமேல், ஓடிவிடு என்று உருமினன்.

துராசதா! சிறந்த தவம் செய்தாய் ! இதன பயனாக, அள விலா ஆற்றலைப் பெற்றாய் ; வித்தக சித்தியை விரயம் செய் கிறாய ; விண்ணவர் முனிவர் முதலினோரை விடுதலை செய் ! உலகில் இனியும் நீ உய்யலாம் என்று, நகைமுகமாகி அருளி னா கணபதிப பெருமான்.

காய்ந்த ஊசி காதில் நுழைந்ததுபோல், அவ்வுபதேசம் கேட்ட கயவன், கொதித்துக் குதித்தான். பராக்ரமம் மிக்கவர், படு கேடாயினர். இளங்கன்று பயமறியாது என்பர் ; அது போல் உனது சொற்கள் உள. மழலை மொழிகேட்டு இவ்வளவும் பொறுக்கிறேன். மேலும் இந்த ஆனைமுகம், எவர் பிறப்பிலும் இல்லை. அதற்காகவும் இரக்கம் காட்டுகிறேன் ! உய்ய வேண்டுமேல், ஓடி விடு என்றான.

நகை செய்தார் நம்பர். சிங்க வாகனர் ஆயினர். கனம் தோனறக் கனைத்தார். கர்ஜித்தது சிங்கம். அந்த அதிர்ச்சி தாங் காமல், அவனது அளவிலாத படைகள் அழிந்தன.

வளந்தரும் செல்வம்போல் வனப்பில்லை ; எண்ணில்
இளமையோ டொப்பாவ திவ்வுலகில இல்லையரோ.

கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, கைப்படை, மூலப்படை யாவும் மேலும் மேலும் திரண்டு வந்தன.

அதுகண்ட பெருமான் அருளாடல், அற்புதங் காடட ஆரம்பித்தது. பத்துக் கைகளுடன், சிங்க வாகனமாகச் சில கணபதிகள் ;

நான்கு கைகளுடன், பெருச்சாளி வாகனமாகச சில கண பதிகள ; ஆறு கைகள், மயில் ஊர்தியாகச சில கணபதிகள்.

இரு கைகளுடன், மான் வாகனத்தில சில கணபதிகளாக, எங்கும் எங்கும் அவர் சொரூபம் கோர தாண்டவம் செய்து கொக்கரித்தது.

தரையில் சிலரைத் தாக்கின. மலையில் சிலரை மோதின. ஆழ் கடலில் சிலரை ஆழ்த்தின. கடித்தும், கரங்களால இடித்தும், அடே அபபா ! பெரிது பொறுத்த சர்வ சக்தி, இன்று கொன்று தள்ளும் புரட்சி, அதி கோரமாக இருககிறது. தருமத்தைப் பாதுகாக்கத தநதிமுக எநதை, நாறபுறத்தும் இப்படி நாசம் செய்தனர். நாச காரியம் செய்பவர், தெய்வத தால் நாசமே ஆவர் என்ற அனுபவத்தை இஙகு அறிகிறோம்.

உலகம் அநீதியில் உருவாகவில்லை கடவுள் வேந்தர் காப்பு உண்டு. அவர் திருமுன, அசுர சக்தி அழிந்தே போகும்.

ஆண்மைக்கும் ஆணவததிற்கும் வேற்றுமை யறியாத துராசதன, உதட்டை மடித்துக் கடித்தான. அவன் சிரிக கிறன. அவன் ஆயுதஙகள பளபளக்கினறன.

அண்டமுகடு அதிர கர்ஜித்தான. பல நேரம் நிகழ்ந்தது பயங்கரப போர். கனலானுன். புனலானுன். காற்றுனுன, பிற ஆனுன. இனறேடு உலகம் அழியும் போலும் என்று அமரர் அலறினா. அப்படி யெல்லாம் வந்து மோதி அநியாயம் பல செயதான்.

அரியசெயல யாவும், அருமுயற்சி யால்புரிவர்;
பெரியஅப் பேறனைத்தும் பெரியர் பெறுவாரே.

இது வரை பொறுத்த பெருமான், தன் விசுவ ரூபம் எடுத்தார். அவன் தலைமேல் ஒரு திருவடியை வைத்தார். மற்றொரு திருவடியை, காசி நகரில் வைத்தார்.

துராசதா! உன் முனைய தவத்தை எண்ணி, உன் ஆயுளை முடித்திலம். இத்தலத்தில் எம் திருவடிக்கீழ் இருந்த படி, அக்கிரமம் செய்வாரை அடக்கி இரு என்று அருளினர்.

மிருக பலத்தை நம்பி வாழ்ந்தவன், அந்த மிருக பலத்தா லேயே அழிக்கபபட்டான. வாளை எடுப்பவன் வாளால் அழி வான். இதுதான என்றுமுள அனுபவம். துராசதனது சர்வாதி கார ஆட்சி சரிந்தது.

தரும விரோதமாகத் தழைத்து வளர்ந்து, ஆரவார ஆவேச அட்டகாசங்கள் செய்யும் அசுர சக்திகளின் வாழ்வு, இப்படித் தான் முடியும்.

ஞானிலம் முழுதும் நடுங்கச செய்து, நல்லவர்களைக் கண்ணீர் விடச் செய்யும் தீவினையின் கதி இதுதான் என்று, அறிந்துள அறவோர் இன்றும் பலருளர்.

கணபதி திருவடி ஸ்பரிசத்தால், துராசதனுக்கு உண்மை ஞானம் உதயம் ஆயது. அவனது மாயா பாசம் யாவும் மாய்ந்தது. பேருன ஆநந்தம் பெற்றவனுய், தீமையாளரைத் தீர்த்துக் கட்டி, அவன் இன்றும் அங்கு இருக்கினருன்.

அவனை யடக்கிய கோலக் கணபதி, உடுண்டி விநாயகர் எனும் பெயருடன், காசிப் பதியில் காட்சி தருகிருர். அவுணப் படைகளை அழிக்க எழுந்த ஐம்பத்தாறு பேத ரூப கணபதிகள், காசி விஸ்வேசர் திருக்கோயில் ஏழாவது ஆவரணத்தில், இன்றும் எழுந்தருளியுளர்.

அம் மூர்த்திகளை அமரரும் பிறரும் வழிபட்டு, என்றும் இன்பம் எய்துகின்றனர்.

வாழ்க கணபதி பக்தர்கள்!

வறியவருக் கீவதுவே ஈகை ; வழுக்கும்
சிறியார் செயுந்தருமம் படாடோபம், சீரழிவே.

BHAJAN

PART III

Creation is built of Sabda - brahmam and the creator is immanent within it. Bhajan is an effective means of establishing concordance with the Supreme in His Sabda Brahma form. Everything in Bhajana and its accompaniments helps in this concordance and unification, Sruti, layam, song, Bhava, understanding, all combine to produce a state of mind which by slow degress slips into absolute attunement with the supreme. Bhajan makes the immanent Lord manifest; when the Devotee's attunement becomes complete, it will be realised that in Bhajan, devotees *live God*, not merely Godlike.

The story of the lives of great Bakthas reveals how amenable the Lord is to Love. It is not that the Lord is partial to those who love Him, rather the Lord is Love and where the heart of love takes flood, God is most manifest there.

Man begins by loving limited objects and entities in life The very limits of the objects of love are bound to create disappointment. The quality of love is all embracing and eternal. The objects of love are limited in

space and time and form. Distress and disappointment must necessarily be the concomitants of such experience. Disappointed love seeks for objects which well endure beyond time and space. The distressed mind seeks solace in Bhajan, in the immortal joy that resides therein, and through the solace from immediate disappointment and distress, great saints have touched the fountain-head of love, the Lord within. It cannot be otherwise either; for Love is what is due to the Lord and Lord only. That is His great quality. The Lord of the World is the God of love. With every step in Bhajan the Love in the heart of the devotee expands. It pervades the living creation, transcending slowly all limitations of caste, creed and clime. The man becomes completely absorbed in the love of God. In the ecstasy of Bhajan, the mind of man becomes dissolved in the flood of God-Love with which he bathes the Universe. Love becomes a quality of the soul—not merely the reaction to an outside contact. It ceases to be the result of causation and becomes the joy of self expression. (*To Continue*)

—*Thiruppugal Mani.*

51

முனியே ! நான்முகனே !
முக்கண்ணப்பா ! என்பொல்லாக்
கனிவாய்த் தாமரைக்கண்
கருமாணிக்கமே ! என்கள்வா
தனியேன் ஆருயிரே !
என்தலைமிசை ஆய்வந்திட்டு
இனி நான் போகல் ஒட்டேன் ;
ஒன்றும் மாயம் செய்யேல் என்னையே !

(திருவாய் மொழியே)

No. 1506 அசோகா MILD SCENTED ASOKA

Coffee
ours for Quality

RAW ROAST OR GROUND
GANESH & CO., (MADRAS) LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்
சுவர்ண மாளிகை
A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.
தங்க நகைகள், வெள்ளிப பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூலவீதி :: மதுரை
Tel: "FAITH" Estd: 1924. Phone: 113

குடை மார்க் பினையில்
(சிறநத கிருமி நாசினி)
தயாரிப்பாளர்:
ஸ்பிரிட் வேர் ஹவுஸ்
49. சைடன் ஹாம் ரோடு
சென்னை-3. டெலிபோன்: 25#0
வினியோகஸ்தர்கள:
கார் & கம்பெனி
129, மூர் தெரு
சென்னை-1. டெலிபோன்: 2058

குகஸ்ரீ ரசபதியின் அருள்நூல் விரிவுரைகள்
விநாயகர் அகவல், கந்தர் அநுபூதி, திருவகுப்புகள, கந்தர் கலிவெண்பா,
திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ், திருக்கயிலாய ஞான உலா.
அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1.

Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
63. Tirupalli Street Madras-1.
Edited & Published by S. Muthuswami, 54, Bunder Street, Madras-1.